www.padippakam.com

# நற்றமிழ்

விலை உரு 6.00

இலக்கிய இலக்கணத் திங்களிதழ்

தோள்கள் உடையவர்கள் ஒன்றுபடுங்கள் - புதுத்
தோற்றம் விழைபவர்கள் ஒன்றுபடுங்கள் — அறிஞர் சாலை இளந்திரையனார்

ஆண்டு-ரு திங்கள்-க0 தி.ஆ.உ0ஙசு நளி (கார்த்திகை) (15-11-2005)

ஆசிரியர் : 'தமிழ்மாமணி' புலவர் மு. இறைவிழியன்

இணையாசிரியர்கள் : புலவர் அரங்க. நடராசன், புலவர் செ. இராமலிங்கன்




**புதுவை மாநில முதல்வர்**
**மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள்**
**நற்றமிழ் ஆசிரியர் புலவர் மு. இறைவிழியனார்க்குப்**
**புதுவை அரசின் உயர் விருதான தமிழ்மாமணி**
**விருதினை வழங்குகிறார்**

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு.
-பாரதியார்

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள தமிழர் ஒன்றாதல் கண்டே!
-பாவேந்தர்

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்மாமணி விருதும் நானும்

இளமையில் அறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு' கிழமை இதழைத் தொடர்ந்து படித்ததால் தாய்மொழிப்பற்று வளர்ந்தது. தமிழ் வளர்ச்சிப் பணிகளைத் தொடர்ந்து தனியனாகவும் இயக்கங்கள் உருவாக்கியும் இதழ்கள் நடத்தியும் ஆற்றிவருகிறேன். விருதுகள், பட்டங்கள், பரிசுகளைக் குறியாகக் கொண்டு தொண்டாற்றி வந்திலேன்.

இந்நிலையில் இவ்வாண்டு புதுவை மாநில உயர்விருதான **'தமிழ் மாமணி'** விருது எனக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது நான் எதிர்பாராத ஒன்று. புதுவை மாநில முதல்வர் மாண்புமிகு **ந. அரங்கசாமி** அவர்கள் தூய தொண்டருக்கு அவ்விருதை அளிக்க விரும்பியுள்ளார். அந்த வாய்ப்பை நழுவ விடாமல் என் பெயரை முதல்வரிடம் மொழிந்துள்ளார் என்னை நன்குணர்ந்த அன்பர் ஒருவர். அவரின் கருத்தை மட்டுமே முதன்மையாகக் கொள்ளாமல் முதல்வரும் பலரிடம் உசாவி உள்ளார். பலர் என்னைப்பற்றிச் சிறப்பாகக் கூறியுள்ளனர். இவற்றையெல்லாம் நன்கு ஆய்ந்து பார்த்தும் உரிய விளக்கங்கள் பெற்றும் தெளிந்த முதல்வர் தடைகளைக் கடந்து என் பெயரை விருதுக்கு அறிவித்துள்ளார்.

எங்கள் மாநில முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்களைக் காமராசரின் உருவமாகவே குறிப்பிடுவர், நானோ பல ஆண்டுகட்கு முன்பிருந்தே அவரை அண்ணாவும் காமராசரும் இணைந்த உருவமாகப்பார்த்து வருகிறேன். அவர் உருவால், உடையால் மட்டுமன்று உள்ளத்தாலும் எளியவரே. மாசுற்ற இந்திய அரசியலைத் தூயதாக்கும் நெறியில் சான்றாக வந்த அரசியல் தலைவர் என அவரின் ஆட்சித் தொடக்க நிலையிலேயே 'தினமணி' நாளேடு எடுத்துக் காட்டியது எவ்வளவு உண்மையாகும்.

எல்லா வகையிலும் பாராட்டுக்குரிய எங்கள் மாநில முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்களின் திருக்கைகளால் அவரால் மட்டுமே முடிவு செய்து தரப்பட்ட தமிழ்மாமணி விருதைப் பெற்றதை விருது பெறுவதைவிடப் பெரும்பேறாகக் கருதினேன். இந்த உயர் விருதுக்கு உரியவனாக மேலும் என் தமிழ்ப்பணி தொடரும்.

விருது பெற்றமைக்காக நேரிலும் விழா நிகழ்விலும் இல்லத்திலும் தொலைப்பேசியிலும் வாழ்த்தியும் துண்டு போர்த்தியும் பரிசு வழங்கியும் பாராட்டிய அனைவர்க்கும் என் உளம் நிறைந்த நனறியினைத் தெரிவித்துக்கொள்வதுடன், எனது வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ள தமிழறிஞர்கட்கும் இனிய நண்பர்கட்கும் இளைஞர்கட்கும் இவ்விருதைப் படைக்கிறேன்.

- **இறைவிழியன்**

www.padippakam.com



# கலிப்பாப் பற்றித் தொல்காப்பியர் கூறுவன

கலைமாமணி நூற்கடல் தி.வே. கோபாலய்யர்

தொல்காப்பியப் பொருட்படலத்தின் எட்டாம் இயலாகிய செய்யுளியல் அடிவரையறை உடையன, அடிவரையறை இல்லன என்ற இருதிறச் செய்யுள்களின் இயல்பினை எடுத்துரைக்கிறது. அடிவரையறை உடைய செய்யுள்கள் பா எனவும் பாட்டு எனவும் கூறப்படுகின்றன. பா என்பது சேட்புலத்து ஒருவன் எழுத்தும் சொல்லும் மற்றவர் செவிப்புலத்தே தெற்றெனப் புலனாகாதவகையில் பாடம் ஓதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்தற்கு ஏதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை.

அவ்வோசை அடிப்படையில் அடிவரையறை உடைய பாக்கள் பகுக்கப்பட்டுள்ளன.

**'அகவல் என்பது ஆசிரி யம்மே' - 81**

வலித்தும் மெலித்தும் நெகிழ்த்தும் கூறப்படும் அகவலோசை ஆசிரியப்பாவின் ஓசையாம்.

**'அதாஅன்று என்ப வெண்பா யாப்பே' - 82**

அகவலுக்கு மறுதலைப்பட்ட ஓசையாய், வினாவும் செப்பும், போல எடுத்தலும் படுத்தலுமாக வரும் செப்பலோசை வெண்பாவிற்கு உரியது.

**'துள்ளல் ஓசை கலிஎன மொழிப' - 83**

துள்ளுதலாவது தாவுதல். முரன்று வரும் ஓசை ஈண்டுத் துள்ளல் எனப்பட்டது. துள்ளுதல் எனினும் கலித்தல் எனினும் ஒக்கும். இத்துள்ளலோசை கலிப்பாவிகு உரியது.

**'தூங்கல் ஓசை வஞ்சி ஆகும்' - 84**

தூங்கல் நெகிழ்ந்து நிற்றல். அஃதாவது தொங்குதல். அகவலோசை சிறிது நீண்டு நெகிழின் அது வஞ்சிப்பாவிற்கு உரிய தூங்கலோசை ஆகும்.

**'அவ்வியல் அல்லது பாட்டு ஆங்குக் கிளவார்' - 85**

பாக்களுக்கு உரியன இந்நால்வகை ஓசைகளே. எனவே மருட்பா, பரிபாடல் என்ற கலப்புப்பாக்களுக்க உள்ள ஓசைகளும் இந்நால்வகை ஓசைகளுக்குள் அடங்கும் என்பதாம்.

அகமும் புறமுமாகிய பொருட்பகுதிகள் செய்யுள்கள் வாயிலாகவே விளக்கப்படுதலின், அச்செய்யுள்கள் பற்றிய செய்திகளும் பொருட்படலத்திலேயே இடம்பெறுகின்றன.

**பொருட்கு இடம் செய்யுள் ஆதலின் அதனைத்**
**தெரிப்பதும் அதனது திறம்எனல் வரையார் (இ.வி.)**

www.padippakam.com



தொல்காப்பியனார் காலத்தில் பயில வழங்கிய பாக்கள் ஆசிரியம் வஞ்சி வெண்பா கலி என நான்காக விரித்து உரைக்கப்பட்டன.

**ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென**
**நால்இயற்று என்ப பாவகை விரியே - 105**

நான்காக விரித்துரைத்த பாக்களைத் தொகுத்துக் கூறின் அவை ஆசிரியப்பா, வெண்பா என்ற இரண்டு பாக்களினுள்ளே அடங்கும், வஞ்சி ஆசிரியத்துள்ளும், கலி வெண்பாவுள்ளும் அடங்கும்.

**பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்**
**ஆசிரிய யப்பா வெண்பா என்றாங்கு**
**ஆயிரு பாவினுள் அடங்கும் என்ப - 107**

**ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை**
**வெண்பா நடைத்தே கலிஎன மொழிப - 108**

வாழ்த்து வகைகள் இந்நாற்பாக்களாலும் கூறப்படும்.

**வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே -109**

ஆனால் ஒருவனை முன்னிலைப்படுத்தி நீ தெய்வம் காக்க நின் வழிமரபும் சிறக்க வாழ்க என்று வாழ்த்தும் பாடாண்திணைப் புறநிலை வாழ்த்து கலிப்பாவிற்கும் வஞ்சிப்பாவிற்கும் உரியதன்று.

**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே**
**கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ - 110**

புறநிலைவாழ்த்தே அன்றி வாயுறைவாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறூஉ என்ற பொருண்மைக்கண்ணும் கலிப்பாவாலும் வஞ்சிப்பாவாலும் பாடப்படும் மரபு இன்று.

**வாயுறை வாழ்த்தே அவையடக் கியலே**
**செவியறி வுறூஉ என்று அவையும் அன்ன - 111**

- தொடரும்.

## புலவர் நயம்பு. அறிவுடைநம்பிக்கு வித்தியாஇரத்தின விருது

புது தில்லியில் உள்ள தேசிய நலவழி, கல்வி வளர்ச்சிப் பொருளகத்தின் சார்பில் "National Economic For Health and Educational Grouth" என்ற நிறுவனம் ஆலம்பூண்டி அரசு மேனிலைப் பள்ளி முன்னாள் தலைமையாசிரியரும், உலகத்திருக்குறள் பேரவை மண்டலச் செயலருமாகிய புலவர் **நயம்பு. அறிவுடைநம்பி** அவர்களின் கல்விப்பணி, நலப்பணி, சுற்றுச்சூழற் பணி ஆகியவற்றைப் பாராட்டி 30-09-2005 அன்று புதுதில்லியில் **"வித்தியா இரத்தினம்"** என்ற விருதையும், விருதுக்கான தங்கப்பதக்கத்தையும், அதற்கான நற்சான்றிதழையும், நிறுவனப் பரிசு பேழையினையும் அளித்துப் பாராட்டிச் சிறப்புச் செய்தது. விருது பெற்ற நம்பிக்கு நற்றமிழின் நல்வாழ்த்துக்கள்.

www.padippakam.com



# நற்றமிழ்க்கு வந்த நன்மடல்கள்

"நற்றமிழ்" எனக்குத் தொடர்ந்து கிடைக்கின்றது படித்து மகிழ்கின்றேன். தங்கள் அன்புக்கு மிக்க நன்றி. "நற்றமிழ்" ஏட்டில் தொடர்ந்து வெளிவரும் கொடுத்தபடி தொடுத்த பாடல்கள் எனக்கு மிகவும் பிடித்தவை. விரும்பிப்படிக்கின்றேன். மற்ற ஏடுகள் செய்யாத ஒரு கின்னசு சாதனையாக அப்பகுதி இருக்கிறது. ஒவ்வொரு திங்களும் அப்பாடல்களைப் படித்து நான் வியந்து போகின்றேன். தூய தமிழில் ஏட்டை என் தாயைப்போல் நேசிக்கின்றேன். அது தரும் இன்பத் தமிழை சுவாசிக்கின்றேன். தமிழ் உள்ளவரை நற்றமிழ் வளர்ந்து வாழ்க.

- பாவலர் சுரபி. சுப. சந்திரசேகரன்.

நற்றமிழ் துலை இதழில் "தமிழ்ப் பெண்களே தெளிவு பெறுக" கருத்துரையை மிகச் சரியாகச் சுட்டிக் காட்டியுள்ளீர்கள். கொடுத்தபடி தொடுத்த பாடல் எண் 43, 45, 67, 123, 168, 173, 183, 197, 213, 215 ஆகிய பாடல்கள் என்னைப் பெரிதும் ஈர்த்தன. தொடுத்தலும் விடுத்தலும் பகுதியில் தமிழ்த் தேசியம் பற்றி மிகச் சரியாக அருமையாகக் கருத்தினைத் தெரிவித்துள்ளீர்கள். மிக்க நன்றி. "நற்றமிழ்க்கு நலமான தொண்டாற்றும் தங்களுக்கு மனமார்ந்த நன்றி!

- வேலூர் செந்தமிழ்க்கோ.

சென்ற திங்கள் இதழில் எம்போன்ற தனித்தமிழ்ப் பாவலர்கள் வளர வழித்துணைகள் யாப்பதிகாரம், தொடைநயம், இராவண காவியம் வரைந்த புலவர் பெருமான் புலவர் குழந்தை அவர்களின் நூற்றாண்டுச் செய்தி முகப்புகள் மலர்ந்த இதழுக்கு எமது இனிய நன்றி!

- கவிஞர் பெ. அறிவழகன், சின்னசேலம்.

தமிழ்ப் பெண்கள்! தெளிவு பெறுக! ஆசிரியவுரை, தமிழ் நெஞ்சங்களின் குமுறலை வெளிப்படுத்துவதாக அமைந்தது. கல்வியிற் சிறக்கும் பெண்கள், தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது, தமிழ் வழிக் கல்வியில் கல்வி பெறா நிலையால் தான்!

தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயரே வைக்க வேண்டும் என்பதை முதற்கடமையாகக் கொண்டு இயங்கி வருகின்றோம். அவ்வகையில் பலரும் அணுகவே செய்கின்றனர். அப்படி அணுகும் எல்லாரும் தமிழ்ப் பெயரை ஏற்கின்றனரா? அப்படி ஏற்காதோரை எண்ணிப் பார்த்தால் இதற்குத் தடையாக இருப்போர், தாயாகும் பெண்களும் அவர்தம் தாயாருமே யாவர்! எம் இயக்கத்தில் நிகழ்ந்த சில காட்டுகள் :

'முகில்' என்று பெயர் வைக்கச் சொன்னதைக் கணவர் ஏற்றார். மனைவியோ அதை ஏற்காமல், 'மேஹா' என்று பெயர் வைத்தார்!

www.padippakam.com



'கதிர்' அல்லது 'கதிரவன்' என்று சொன்னதை எம்மகனின் நண்பர் ஏற்றார். ஆயின், அவருடைய மனைவியோ, 'சூர்யா' என்று பெயர் சூட்டினார்.

'நி' என்ற எழுத்தில் பெயர் கேட்டவர்க்கு 'நிலவன்' என்று பெயர் குறித்துக் கொடுத்தேன். நல்ல பெயர் என்று பாராட்டினர் ஆடவர்கள் ஆனால், அக்குழந்தையின் தாயும் பாட்டியும் அதை ஏற்காமல் நிதீஷ்குமார், என்று பெயர் வைத்தனர்.

இதுதான் இன்றைய தமிழர் நிலை. திருமணம் போன்ற நிகழ்வுகளிலும் அய்யரை வைத்தே செய்ய வேண்டும் என வலியுறுத்துவோரும் அம்மையார்களே! இந்நிலை மாற ஊடகங்கள் மாற வேண்டும்! நந்தமிழ்க் குடும்பங்கள் தமிழ்ச் சொற்கள் கொண்ட கோலம் போடுவதையும், தமிழ்ப் பெயர் சூட்டுவதையும், தமிழ் வழிக் கல்விக் கூட்டங்களில் சேர்ப்பதையும், தமிழிலேயே பேசுவதையும் வலிந்து செய்ய வேண்டும். அப்போது நிலைமை மாறும் என்று நம்புவோமாக! **- தா. அன்புவாணன் வெற்றிச்செல்வி, காஞ்சிபுரம்.**

நற்றமிழ் துலைத் திங்களிதழ் சுவைத்தேன்; மகிழ்ந்தேன். ஆங்கில மோகத்தால், தாங்கிட வேண்டிய தமிழைத் தாழ்த்திட நினைக்கும் கற்ற, புலமையுற்ற மகளிருக்குத் தெளிவுண்டாக்க விடுத்துள்ள செய்தி இன்றியமையாதவை. கருத்தரங்கப் பொழிவுகள் புலவர்களின் உறுத்தலுக்கு மருந்தாகி உதவின.

தலைவனின் பொருள் வயிற் பிரிவினைத்தாளாமல் தலைவியின் ஊசலாடும் நெஞ்சம்பற்றிய குறுந்தொகைச் செய்தியும் நல்விருந்தே. வேலாள் - வேலாழ் குறளோட்டச் சொல் ஆய்வும் விளக்கமும் களிப்பூட்டும் வண்ணம் பளிச்சிட்டன.

சோக்ரதர் சலனப்படாமல், சஞ்சலப்படாமல் நச்சுக் கோப்பையை உற்சாகத்தோடு, தயக்கமின்றிப் பெற்று நஞ்சைக்குடித்த தனித்துவம் வள்ளுவரின் நெஞ்சையும் நெருடியதாலேயே "பெயக்கண்டும் நஞ்சுடைமைவர்" என்ற குறள் பிறந்திருக்க வேண்டுமென்பது சரியான யூகமே. **- புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி.**

வேலாள் - வேலாழ் - ஓர் ஆய்வு, கட்டுரை, மிகச் சிறப்பானதோர் ஆய்வு விளக்கமாக அமைந்திருந்தது. இதுபோன்ற புதிய கோணப் பார்வைகளில் பார்க்கப் படுகின்ற கருத்துக்கள் உண்மையிலே இக்காலத் தமிழினத்திற்கு அவசியமானவை; தெரிந்து, தெளிந்து கொள்ள வேண்டியவை. நற்றமிழ் எப்போதும் நலமிக்க செய்திகளையே தருகிறது. ஆய்வறிஞர் அரசபாரத் அவர்களுக்கு நன்றிகள்; 'நாறா டனா' தொடுத்தளித்த 'பாவலர் மருவன்' அவர்களுக்கும் நன்றி.

**- கவிச்சிற்பி "காற்று", கோவை.**

படிப்பகம்

www.padippakam.com



# புதுவை அரசின் தமிழ்மாமணி விருது பெற்ற இறைவிழியனார்க்குப் பாராட்டுப்பா

புகழுடைய புதுவையினில் போற்றுதமிழ் வாணர்பலர்
திகழுறுவர் அவர்போற்றச் செந்தமிழ்க்குத் தொண்டுபல
மிகவளிக்க "நற்றமிழ்"நல் லிதழ்கொள்இறை விழியகேள்!
நீதருமவ் விதழதனால் இளங்கவிஞர் பலர்பெருகி
மேதகவே பெரும்புலமை மேன்மையாய் விளங்குவரே
நீதருமவ் விதழதனால் நேரியசெந் தமிழ்ப்பாக்கள்
மேதினியில் மிகப்பெருகி மேன்மைத்தமிழ் விளங்கிடுமே.
நீதருமவ் விதழதனால் நீடுதமிழ் இலக்கணமும்
கோதில்புரி மைவளர்க்கும் கூறவும்வேண்டுவதேயோ
எனவேதான்
தமிழ்மா மணியாம் தக்க விருதைத்
தமிழ்மா நெஞ்சம் தகவுடன் போற்ற
தந்தது புதுவை யரசென் றாலதைச்
சிந்தை மகிழச் சிறக்க வாழ்த்தி
நின்னையும் வாழ்த்தி மகிழ்வேன்,
அன்பன் நன்றே ஆ.சிவ லிங்கனே.

- முதுபெரும்புலவர் **ஆ. சிவலிங்கனார்,**
மேனாள் முதல்வர், சி.பா.சு. தமிழ்க்கல்லூரி, மயிலம்.

# இறைவிழியனுக்கு இனிய வாழ்த்து

இறைவிழியன் ஓங்கும் இனவுணர்வில் குன்றம்
குறையாத் தமிழுணர்வில் கொண்டல் - நிறைவாய்த்
தமிழ்மா மணியாம் தகுவிருது பெற்றார்
அமிழ்தூய வாழ்த்தும் என் அன்பு.

உண்மை உணர்வும் உழைப்பும் வினை முடிக்கும்
திண்மையும் தாங்கிச் செழுந்தமிழ்க்கே - நன்மையெழப்
பாடாற்றித் தந்த பரிசென்று வாழ்த்துகின்றேன்
தேடாது வந்த சிறப்பு.

உள்ளத் துறுதியும் ஊக்கமும் கொண்டவர்க்(கு)
எள்ளத் தனையும் இடர் இல்லை - கள்ளத்தால்
தாக்கவந்த நோயும் தகர்த்தெறிந்து வாழ்கவே
ஆக்கவினைக்(கு) இன்னும்பல் லாண்டு.

- பேரா. ம.இலெ. **தங்கப்பா,** தலைவர், தமிழர் நலக்காப்பணி.

www.padippakam.com



# இறைவிழியனுக்கு வாழ்த்து

தாங்கள் தமிழ்மாமணி விருது பெற்ற நல்ல செய்தியை ஏடுகளில் கண்டேன். மிக மிக மிக மகிழ்ந்தேன். ஐயா, **'தமிழ்மாமணி'** விருது தங்களால் புதிய பெருமை பெற்றது. அருள் கூர்ந்து விருதினை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

**- தமிழ்மாமணி புலவரேறு அரிமதி தென்னகனார்.**

---

நற்றமிழ் திங்கள் நலமார் இதழின்
உற்றநல் லாசான் உயர்இறை விழியார்
முற்ற தமிழ்ப்பணி முனைந்து செய்வதால்
பெற்றார் தமிழ்மா மணியாம் விருது!
வாழ்க! அவர்தம் விருது!
சூழ்க தமிழ்நலம் அவரால் நன்றே!

**- தே. முருகசாமி, புதுவை.**

---

புதுவை அரசு தங்கட்குத் தமிழ்மாமணி விருது அளித்துள்ளமை அறிந்தேன். மகிழ்ச்சி. தங்கள் நற்றமிழ்த் தொண்டிற்குக் கிடைத்த இவ்விருது உழைப்பின் விருது. தங்கட்கு என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்கள். **- முனைவர் வே.ச. திருமாவளவன், புதுவை.**

---

நற்றமிழ் என்னுமோர் திங்களிதழ் நல்லாசான்
உற்ற இறைவிழியன் என்னும் ஒருபெயரான்
பெற்றான் புதுவை அரசின் பெருவிருதாம்
நற்றமிழ் மாமணியைப் போற்று.

**- பாவலர் அரங்க. பணிக்குன்றன், புதுவை.**

---

'மறை'வழியோ வள்ளுவனார்
வான்மறையைப் போற்றுதலே
'துறை'நிலையாய்ச் செழுந்தமிழைத்
தூக்கிவிடும் அரும்பணியே!
பறைமுரசாய் நறுந்தமிழ்சேர்
பண்பிணைந்த மொழித்தொண்டே
'இறைவிழியர்'க் கணிவேறென்?
இனிய 'தமிழ் மாமணி'யே!

www.padippakam.com



எண்ணுக்கும் எழுத்துக்கும்
எழிலிருந்தும் கறையாக்கி
மண்ணுக்குப் பழிசேர்க்கும்
மடியுடையார் 'இடை'யிடித்துப்
புண்ணுக்கு மருந்திடவே
புதருக்குள் நுழைசாமிக்
கண்ணிவர்க்குத் தமிழன்பால்
தருகின்றேன் கனிவாழ்த்தே!

**- பரிதி. இரா. வேங்கடேசன்,** புதுவை.

---

உடல் நலம் விரைவில் சீராக நல்வாழ்த்துகள். மருந்துண்டு வருவீர்கள் என நினைக்கிறேன். **'தமிழ் மாமணி'** வாங்கியமைக்காக அன்புடன் பாராட்டுகிறேன். தொடர்பு கொண்டேன். கிடைக்கவில்லை. மனநலத்தால் வெல்க!

**- க. தமிழமல்லன்**
ஆசிரியர், வெல்லும் தூயதமிழ், புதுவை.

---

நீங்கள் "தமிழ்மாமணி" விருது பெறுவதை அறிந்து பேருவகை பெறுகிறேன். பாராட்டுகள்! வாழ்த்துகள்!

உங்கள் உயரிய தமிழ்ப்பணி தொடர்ந்து வளர்க!

**- மாசில் மகிழ்நன் (ச.மு. விமலானந்தன்)**

---

நற்றமிழால் நாளும் நலங்கூட்டும் நல்லறிஞ!
கற்றவர்தம் உள்ளங் களிகூரப்-பெற்றனையே
மாண்பார் "தமிழ்மா மணிவிருதும்", வாழுதியே!
நீண்ட புகழில் நிலைத்து.

- கலைமாமணி **கோவி. கலியபெருமாள்,** புதுவை.

---

# செம்மொழியின் சேய்!

நோயின்றி வாழியவே நூறாண்டு! செந்தமிழ்த்
தாயின்பால் பற்றுள்ள தண்மனம் வாழியவே!
நம்மவர் ஆய்வுகள் நாட்டினில் வந்திட
நும்மனம் செம்மொழி நுண்புலம் காட்டிடும்!
உங்களின் செந்தமிழ் உள்ளத்தைப் போற்றுவோம்!
எங்களின் வாழ்த்தினை ஏற்றுநீர் வாழ்த்துவீர்!
நற்றமிழ் மாமணியே நல்விருதைத் தாயவள்
வெற்புடன் தந்தனள். வீறார்ந்த போராட்டம்,

www.padippakam.com



ஊராளும் துண்டறிக்கை, ஓயாத நல்லுழைப்பு
ஏராளம்! ஏராளம்! எந்நாளும் வாழ்த்துமே
சீரான செம்மொழியின் சேய்!!

- மணிமேகலைகுப்புசாமி, புதுவை.

நற்றமிழைக் காப்பதற்கும், நல்லறிவு பெற்று
நானிலமும் சிறப்பதற்கும், நல்லதையே யேற்று
நற்றமிழர் வாழ்வதற்கும், நற்பண்பைக் கற்று
நாட்டிற்கே உழைப்பதற்கும் நல்லெண்ணங் கொண்டு
நற்றமிழ்க்குப் பணிசெய்தாய் நற்றமிழேட் டாலே
நல்லரசும் நல்கிற்று நன்றெனவே விருதை!
நற்றமிழ்மா மணியே! நற்பணிக ளென்றும்
நாட்டோர்க்குத் தொடருட்டும்! நலந்தருமென் தமிழே

- பாவலர் ஆ.சோ. இராமலிங்கம், புதுவை.

# நற்றமிழ் ஆசிரியர் மு. இறைவிழியனார் தமிழ்மாமணி விருது பெற்றார்

புதுச்சேரி கலை, பண்பாட்டுத்துறை மிக உயர்ந்த விருதாகிய **"தமிழ்மாமணி"** விருதை "நற்றமிழ்" ஆசிரியர் மு. **இறைவிழியனார்க்கு** அவருடைய ஆழ்ந்த புலமைக்கும், இடையறாத் தமிழ்த் தொண்டுக்கும் பரிசாக வழங்கிச் சிறப்பித்துள்ளது. விருது பெற்ற இறைவிழியனார் பலவளமும் பெற்று நீண்ட நெடுநாள் வாழ வாழ்த்துகிறோம்.

நற்றமிழ் ஆசிரியர் நண்பர் இறைவிழியர்
வற்றாத் தமிழ்மா மணிருதைப் - பெற்றுயர்ந்தார்
பல்வளமும் பெற்றுப் பரவைபோல் அண்ணலவர்
வல்லாங்கு வாழ்க மகிழ்ந்து.

- புலவர் அரங்க நடராசன், புலவர் செ. இராமலிங்கம்,
இணையாசிரியர்கள்

www.padippakam.com



# மொழிஞாயிறு தேவ நேயப்பாவாணர் மழலையர் பள்ளி!

தமிழகத் தமிழரின்றி உலகத்தில் 70-க்கும் மேற்பட்ட நாடுகளில் வாழும் தமிழர்களுக்குத் தமிழன் பிறந்தகம் குமரிக்கண்டம். குமரிநாடே தமிழ்நாடு. முதல் மாந்தன் தமிழனே! ஞால மொழி தமிழே! திராவிட மொழிகளுக்கின்றி ஞால மொழிகளுக்கெலாம் தமிழே தாய்மொழி யெனத் தன் வறுமையும் பாராது நுண்மாண் நுலைபுலம் கொண்டு வரலாற்றுச் சான்றோடு அரிய பல நூற்களைத் தமிழ், ஆங்கில மொழியில் எழுதியவர் நம்பாவாணர்.

பாவாணரைப் பற்றி மலேசிய மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் பாவாணரின் நூற்றாண்டு மாநாடு மலேசியத் தமிழ் பண்பாட்டியக்கம், தமிழ் இலக்கியக் கழகம், மலேசியத் தமிழ் நெறிக் கழக ஏற்பாட்டில் கடந்த திருவள்ளுவராண்டு தமிழாண்டு 2035 விடைத்திங்கள் 13 ஆம் பக்கல் ஆங்கிலம் 27-5-2004 இல் மலேசிய கோலாலும்பூர் நகரில் நடைபெற்றது. இம்மாநாட்டில் சொல்லாய்வறிஞர் ப. அருளி, எழுகதிர் ஆசிரியர் அரு. கோபாலன் பிறவெளி நாட்டறிஞர்கள் பாவாணரின் தமிழ் மொழித் தொண்டினைத் திறம்பட எடுத்தியம்பினர்.

தமிழ்மொழி செம்மொழியென நடுவணரசு அறிவித்துவிட்டது. இனி தமிழகத்தில் எல்லா நிலைகளிலும் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுத் தமிழே ஆட்சி செய்யும் என்று அங்கலாய்ப்புக் கொள்ளும் தமிழக ஆட்சியாளர்களின் அந்நிலையைக் கண்டு தமிழ் மக்களும் ஏமாந்து வருகின்றனர் என அறியலாம்.

தாய்த் தமிழகத்தில் பாவாணர் பெயர் கொண்ட மழலையர் தமிழ் வழிப்பள்ளியைப் பொருளாசையால் குமுகப்பகைவர்களால் இடித்ததைக் காணும்போது மொழி நிலையில் பெருவாரியான மக்கள் புரட்சியோ அரசியலர் ஈடுபாடோ கிடையாதென தெரியபெருகிறது. அங்கு வாழ்பவர் தமிழரா! நடைபெறும் ஆட்சி தமிழாட்சியா? தமிழ்நாடுதானா? என என்போன்றவர்களிடையே எண்ணம் தோன்றுகிறது.

தமிழ் செம்மொழியென அறிவித்து என்ன பயன்? பொது நிலையான பாவாணர் பெயர் கொண்ட மழலையர் பள்ளிக்கே இவ்வாறான நிலையெனின் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழரின் மொழி, இன, வாழுமை நிலையில் துன்பம் நேரிடுமாயின் தாய்த்தமிழகத்தை எவ்வாறு நம்பி இருப்பது! தமிழக அரசையும், மக்களையும் எண்ணிப்பார்க்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழக அரசியலரும், தமிழக மக்களும் உலகில் வாழும் தமிழ் மக்களும் தமிழ் மொழியறத்தின் மூச்சாகவும், வாழ்வாகவும் எண்ணி மனத் திரையை அகற்றாதவரை தமிழ் மொழிக்கு என்றென்றும் ஏற்றமிராத நிலையே இருக்கும்.

"தமிழயரத் தாழ்ந்தான் தமிழன் - அவனே
தமிழுயரத் தானுயர்வான் தான்", பாவாணர்.

**- க. இராம. மாணிக்கம், மலேசியா.**

www.padippakam.com



# நான் நம்ப மாட்டேன்

புலவர் அரங்க. நடராசன்

கொன்றை மரங்கள் புதிதாகப் பூக்கள் பூக்கத் தொடங்கிவிட்டன. அந்தப்பூக்கள் நெருங்கிப் பூத்துக் கொடிகொடியாகத் தொங்கவும் செய்கின்றன. அந்தப் பூக்களில் வண்டுகள் வந்து ஒலியெழுப்பவும் ஆரம்பித்துவிட்டன. பொன்னால் புனைந்து செய்த அணிகளைச் சுற்றிக் கட்டிக் கொண்டிருக்கின்ற மகளிர் கூந்தலைப் போல, அந்தப்புதிய பூக்களைக்கொண்ட கொன்றை மரங்கள் தோற்றமளிக்கத் தலைப் பட்டுவிட்டன.

அவற்றைக் கண்ட முல்லைக்காடுகளும் வாய் திறந்து வெள்ளிய முல்லைப்பற்கள் வெளித்தோன்ற மழைக்காலம் வந்துவிட்டது! மழைக் காலம் வந்துவிட்டது! என்று கூறுகின்றன. அவ்வாறு அவை கூறினாலும், என்னவருடைய வாய்ச்சொல்லைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கும் நானோ, அதனை நம்ப மாட்டேன்.

ஏன் நம்ப மாட்டேன் என்கிறாய் என்று கேட்கிறாயா? ஏனென்றால் அவர் பொய்சொல்ல மாட்டார்! பொய் சொல்ல மாட்டார்! புரிகிறதா?

"மழைக்காலம் வருவதற்குமுன் நான் வந்துவிடுவேன்" என்று கூறிப்பிரிந்து சென்றான் கணவன்; மழைக்காலம் வந்து விட்டதை இயற்கையே எடுத்துரைத்தாலும் நம்ப மறுக்கும் இந்தத் தலைவி, கணவன் வாய்ச்சொல்லின்மீது வைத்திருக்கும் நம்பிக்கைதான் என்னே!

**வண்டுபடத் ததைந்த கொடியிண ரிடையிடுபு**
**பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்**
**கதுப்பிற் றோன்றும் புதுப்பூங்கொன்றை**
**கானங் காரெனக் கூறினும்**
**யானோ தேறேனவர் பொய்வழங் கலரே.**

(குறுந்தொகை - 21 ஓதலாந்தையார்)

(பருவம் வருந்துணையும் ஆற்றுவித்த தோழி, பருவம் வந்தபின் தலைவியை ஆற்றுவிக்க அறியாது கவன்றாட்குத் தான் ஆற்றுவல் என்பது படத் தலைவிசொல்லியது)

## திரு. வே. தில்லைக்கோவிந்தன் அவர்கட்குப் பணிநிறைவுப் பாராட்டு

புதுச்சேரிச் சவகர்லால் நேரு உயர் மருத்துவ ஆய்வுக் கழக மருத்துவமனை ஊழியரும் நற்றமிழன்பருமான திரு வே. தில்லைக்கோவிந்தன் அவர்கள் அக்டோபர்த் திங்களில் பணியை நிறைவு செய்கிறார். அவர் பல்லாண்டுகள் நலமாக வாழ நற்றமிழ் வாழ்த்துகிறது.

- ஆசிரியர்

www.padippakam.com



# நூல்-அறிமுகம்

**"பாட்டென்னும் வாள் எடுப்பாய்" : ஆசிரியர் : ம. இலெ. தங்கப்பா;** வானவில் வெளியீடு, 79, முல்லை தெரு, கிரிசா நகர், சென்னை - 600 057, விலை : உருவா 40/-

பாட்டுணர்வும் வடிவ ஒழுங்கும் ஒருங்கே அமைந்த மூத்த தலைமுறைப் பாவலர்களுள் தங்கப்பாவும் ஒருவர். 96 பக்க அளவில் அண்மையில் வெளிவந்திருக்கும் அவரது புலமையின் அடையாளமான பாடல்கள் பரவலாக இடம் பெற்றுள்ளன.

அஞ்சல்காரரின் வரவுக்காக வாயிலில் காத்திருக்கும் ஒருவரின் பட்டறிவாக விரிந்திருக்கும் காட்சிகள் எனும் பாட்டு பாடலின் இனிமையை உணர்த்துகிறது. தெருவில் நின்றிருக்கும் சில கணங்களில் எல்லாக் காட்சிகளும் ஒரு புகைப்படக் கருவியில் படிவதைப் போல மனத்தில் பதிந்து விடுகின்றன. ஒவ்வொன்றின் அழகியல் கூறும் மனத்தை மகிழ்விக்கிறது. ஒவ்வொரு காட்சியையும் புத்தம் புதிய பொருத்தமான உவமையோடு அடுக்கிக் கொண்டே போகிறது அவர் மனம். தென்னை ஓலைகள் கிளம்பிப் பாயும் குதிரையின் பிடரிகளாகின்றன. சங்குப் பூக்களின் தோற்றம் நாக்கும் உள்நாக்கும் மடிந்ததைப் போலக் காட்சி அளிக்கிறது. வெள்ளரும்பு நாய்ப்பல்லாகத் தெரிகிறது. நோக்க நோக்க அவருடைய வியப்புப் பெருகியபடி போகிறது. "நொடிதோறும் உள்ளம் விழுந்து பருகும்" என்பது பாடலின் ஈற்றடி.

வாழ்க்கையைச் சுவைப்பது தொடர்பான செய்தியொன்றை இவ்வரி தாங்கி நிற்கிறது. அஞ்சல்காரரை எதிர்பார்த்துத்தான் வாயிலுக்கு வருகிறார் அவர். அஞ்சல்காரர் வரவில்லை. ஆனால் கண்களில் தென்படும் ஒவ்வொன்றிலிருந்தும் ஓர் அஞ்சல் எழுதப்பட்டு அவர் மனத்தை வந்தடைகிறது. ஐம்புலன்களும் மூழ்கித் திளைக்கும் கோலத்தைக் காட்சிகள் அடுக்கி வைத்திருப்பதை நுட்பமாக நோக்கினால் உணரமுடியும். கீற்றின் தோற்றத்தில் கண்கள் ஒன்றிப்போகின்றன.

குஞ்சுப் பறவைகளின் கீச்சுக்குரலில் காதுகள் தோய்கின்றன. மலரின் மணத்தை மூக்கு உள்வாங்குகிறது. காற்றின் தீண்டலில் உடல் மெய்மறக்கின்றது. கொய்யாவின் தோற்றம் வாயில் எச்சிலூற வைக்கிறது. தற்செயலாக நிற்க நேர்ந்து நோக்கும் ஒரு காட்சியில் கூட ஐம்புலன்களும் இன்பமுறும்படி மனம் நெகிழ்ந்து நிற்கும் பயிற்சியே வாழ்வைத்துய்ப்பதற்கான அடிப்படைப் பயிற்சி. தன்னை முழுக்கத் திறந்து வைத்தலென்றும் தன்னை இயற்கையின் பால் ஒப்படைத்தலென்றும் உரைநடைக் கட்டுரைகளில் பல இடங்களில் தங்கப்பா குறிப்பிடும் அடிப்படைப் பயிற்சி இதுவே என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். இளமை நினைவுகள், இயல்பு நவிற்சி, கோவாக் கடற்கரைகள், திளைக்க வாராய், ஆடுமேய்க்கலாம், கோயில் திருவிழா ஆகிய பாடல்களை இத்தகையனவாய்ச் சொல்லலாம்

**- பாவண்ணன்.**

படிப்பகம்

www.padippakam.com



**"சிரித்து வாழ வேண்டும்" : ஆசிரியர் : சி. நாகலிங்கம்;** வெளியீடு; இளங்கோ பதிப்பகம், 2, மாரியம்மன் கோயில் தெரு, தவளக்குப்பம், புதுச்சேரி - 605 007; விலை : உருவா 40/-

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" உணர்ந்தவர் கூறும் உண்மைப் பழமொழி இது. ஆகவே வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும். வாய்விட்டுச் சிரிக்க நல்ல உள்ளமும் நகைச்சுவை எண்ணமும் இருத்தல் வேண்டும். இவ்விரண்டையும் "சிரித்து வாழவேண்டும்" என்னும் இந்நூல் வழங்கும் என்பதில் ஐயமில்லை. இந்நூலில் சிரித்து மகிழும் வண்ணம் நகைச்சுவையைத் தூண்டும் நூற்று எழுபத்தூறு கருத்துகள் படங்களுடனும் சிந்தனையூட்டும் ஒன்பது சிறுகதைகளையும் படைத்தளித்திருக்கிறார் நூலாசிரியர் சி. நாகலிங்கம். சிறுவர் மட்டுமின்றிப் பெரியோரும் படித்து இன்புற்றுச் சிரித்து வாழவேண்டிய நுட்பத்தைக் கூறும் நூல் இந்நூல்.

**"ஆய்வுச் சோலை", "கற்றல் கற்பித்தலில் புதிய நோக்குகள்" :** ஆசிரியர் : முனைவர் கடவூர் மணிமாறன்; வெளியீடு; விடியல் வெளியீட்டகம், 109, மேலைத்தெரு, கிருட்டினராயபுரம் - 639 102. கரூர் மாவட்டம்; விலை : உருவா 50/-, உருவா 40/-.

"ஆய்வுச்சோலை" இந்நூலில் "தொல்காப்பியர் காட்டும் களவொழுக்கம்" தொடங்கி "வாழும் நெறி" ஈறாகப் பதினாறு ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

ஆய்வுச்சோலையில் தொல்காப்பியர், ஔவையார், சித்தர் பத்திரகிரியார் நாவுக்கரசர், சேக்கிழார், வள்ளலார், வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள். பாவேந்தர் போன்றோரின் இலக்கியச் சிந்தனைகளைப் பல கோணங்களில் பகுத்தாய்ந்து தன் தெள்ளிய தமிழ் நடையில் விருந்து வைத்திருக்கிறார் நூலாசிரியர் முனைவர் கடவூர் மணிமாறனார். இவ்வாய்வுச் சோலையில் நுழைந்து காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து சுவைக்க அருமையான பாவடிகளைச் சான்று காட்டி இன்புறச் செய்து சிந்திக்க வைத்திருக்கிறார் நூலாசிரியர். படித்துப் பயன்பெற உதவும் நூல்.

"கற்றல் கற்பித்தலில் புதிய நோக்குகள்" இந்நூலில் கற்றல் கற்பித்தல் பற்றிய பதின்மூன்று கட்டுரைகள் உள்ளன. ஆசிரியர்க்கும், மாணவர்க்கும் உள்ள தொடர்புகள் எவ்வாறு அமைய வேண்டும் என்றும். கற்றலின் போது மாணவர் கவனம் சிதையாமல் இருப்பதற்குக் கேளாரும் வேட்ப மொழியும் ஆற்றலுடன் அன்றாட நிகழ்வுகளின் மெய்ம்மையைப் புதியநோக்குடன் மாணவர்க்கு உணர்த்திக் கருத்தூன்றச் செய்தல் பற்றியும்; தாய்மொழி மூலமே கல்வி பயிற்றல் முறையானது முதன்மையானது என்பது பற்றியும் வலியுறுத்தி, வகைசெய்து இந்நூலைப் படைத்திருக்கிறார் நூலாசிரியர் முனைவர் கடவூர் மணிமாறனார். ஆசிரிய மாணவர்க்கும், ஆசிரியர்க்கும் மிகுந்த பயன் தருவதுடன் ஒழுக்கமும், பண்பும் நிறைந்த புதிய சமுதாயத்தை உருவாக்கும் கருவியாகவும் இந்நூல் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

- புலவர் செ. இராமலிங்கன்.

www.padippakam.com



# கொடுத்தபடி தொடுத்த பாடல்கள்

## வஞ்சி விருத்தம்-8

## கருவிளம்+கருவிளம்+ காய்

தினந்தொறும் தவழ்ந்திடும் தமிழ்மொழியே!
மனதினில் விளங்கிடும் மதியொளியே!
கனவிலும் நினைவிலும் பிரிவிலையே!
இனிவரும் உலகினில் இடரிலையே!
1. - வெள்ளாம்பாக்கம் ம. கேசவன்.

தமிழிலே படிப்பதால் தாழ்வருமோ!
அமிழ்தமாம் கனித்தமிழ் அறிவறிந்து
கமழ்ந்திடும் சுவைத்தமிழ் மொழிவளத்தால்
தமிழையே தகமொழி எனவுரைப்பீர்!
2. - சி. இராசசேகரன், காரைக்குடி.

சிலைகளை வழுத்திட வேண்டுமடா
கலைகளை வளர்த்திட வேண்டுமடா
கொலைகளைத் தடுத்திட வேண்டுமடா
விலைகளைக் குறைத்திட வேண்டுமடா!
3. - கவிஞர் கி. பாரதிதாசன், பிரான்சு.

கடவுளைப் பழிப்பதும் நன்றாமோ
கடமையை மறப்பதும் நன்றாமோ
மடமையை வளர்ப்பதும் நன்றாமோ
உடைமையைப் பறிப்பதும் நன்றாமோ?
4.- கவிஞர் தே. சனார்த்தனன், முதலியார்பேட்டை.

மலைமகள் அருளினை அளித்திடுவாள்
கலைமகள் கலைகளைக் கொடுத்திடுவாள்
விலைமகள் பொருளினைப் பறித்திடுவாள்
நிலமகள் பலவுயிர் எடுத்திடுவாள்!
5.- பாவலர் வே. முத்தையன், முத்தியால்பேட்டை.

பணிவுடன் இருப்பதால் பயன்பெருகும்
துணிவுடன் நடப்பதால் துயர்விலகும்
கனிவுடன் வதிவதால் அருள்நிறையும்
நினைவுடன் மலர்வதால் செயல்ஒளிரும்!
6.- கவிஞர் வே. பூங்குழலி பெருமாள், திரு.வி.க. நகர்.

மொழியது பெரிதென மூச்செனவே,
விழியது வதுவென வீச்சுடனே,
பழியது வருமெனில் பார்துடைக்க,
வழியது தகுமுறை காணுவையே!
7. - வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

உழைப்பவர் உழைப்பினை மதித்தொழுகின்
தழைத்திடும் பலநலம் எனவுணர்ந்தே
"உழைப்பவர் உயர்ந்தவர்" எனுங்கருத்தை
நுழைக்கிறான் மனத்தினுள் சரத்குமரன்.
8. - வெ. பரமசிவபாண்டியன், சின்னாளபட்டி.

உலகினில் உயர்ந்தது தனித்தமிழே
நிலவினால் பெறுவது குளிரொளியே
பலகலை அருள்பவள் திருமகளே
மலர்களில் பிறப்பது நறுமணமே.
9. - புதுவை ப. அங்கயற்கண்ணி.

கரையினில் அடிப்பது நுரையலையே
உரையினில் பெறுவது தெளிவினையே
விரைமலர் அணிபவர் அரிவையரே
சுரையினில் இருப்பது நறவமுதே.
10. - வில்லவன் - ப. முத்தமிழ்வாணன், புதுவை.

தமிழ்படி தமிழ்படி தம்பிதங்காய்!
தமிழக நிலமிசைப் பிறந்தநாமே
தமிழ்தனை விடுத்தயன் மொழிகற்றால்
இமிழ்திரை உலகினர் நகையாரோ.
11.- பாவலர் அரங்க. பணிக்குன்றன், புதுவை.

இலாதவன் இலாதவன் எனக்கெடுத்தே
இலாதவச் செயலிலே ஆக்குவது
வலமெலாம் ஒழிந்திட வைத்திடும்பார்
நலமிலாச் செயலதை விட்டகல்வீர்.
12. - புலவர் கோ. தனபாலன், வில்லியனூர்.

உலகினில் முதல்மொழி தமிழ்தானே,
இலகிடும் கருத்தினை ஏற்காமல்,
உலவிடும் அறிஞரை என்னென்பேன்!
நிலவிடும் பழந்தமிழ்க் கண்ணென்பேன்.
13. - புலவர் வேங்கடராசன், திருவரங்கம்.

திருநிறை பழந்தமி ழுகமிதிலே
இருமொழி யெனுநிலை யெடுப்பதிலோர்
பொருளிலை யெனவுணர்ந் தினித்தமிழ்க்
கொருமொழி தமிழென முழங்குவமே!
14. - மருத நாடன், திருச்சி.

அருள்நெறி அருள்நெறி என்றுரைத்தே
கருக்கியே அறிவினைப் பாழாக்கி
இருட்டினில் அமுக்கிடும் மூடவெண்ணக்
குருட்டுல கதனையே ஒறுத்திடுவீர்!
15. - அதலை இராமன், மதுரை.

நறுமண மலர்களை நாடிவரும்
சிறுசிறு மணமலர் வண்டுகள்போல்
குறளதன் கருத்தினைக் கற்றோதி
அறவழி நடந்திடு வோம், நாமே!
16.- கவிஞர், மருத்துவர் இராகவனார், அதலை.

www.padippakam.com



பலருமே படைக்கிறார் பலவகையில்
பலரினில் சிலரையே பாரறியும்!
சிலரிலும் சிறப்புடன் திகழ்ந்திடவே
நலந்தரு கருத்தளி நனிமனமே!
17. - து. ஆதிநாராயணமூர்த்தி, பரதராமி.

தளர்வுறும் மனத்தினைக் கிளர்த்திடுவாய்
வளர்பிறை எனப்புகழ் வளர்த்திடுவாய்!
உளத்தினில் உயர்வையே ஊன்றிடுவாய்
களமெலாம் களிறென வென்றிடுவாய்!
18. - திருமதி கற்பகம், பரதராமி.

கொலைத்தொழில் புரிந்திடும் கொடியரினும்
நிலையினில் திரிந்திடும் நெஞ்சமிலார்
கலையெனும் பெயரினில் களையாவார்
விளைந்திடும் பொழுதினில் வேரறுப்பீர்!
19. - பாவலர் இரத்தின. சின்னசாமி.

நடப்புகள் எழுதுக பாட்டினிலே;
மடவரே விடுங்களேன் கடவுளரை;
தொடர்ச்சியாய் ஒருபொருள் தவிர்த்திடுவீர்;
இடம்பெறச் சிறப்புறும் பேச்சார்வம்!
20. - தேசிங்கன், செஞ்சி.

இளமையில் அனைவரும் கற்றிடுவோம்
வளமுடன் தமிழினைப் பெற்றிடுவோம்
வளமிலாச் செயல்களை ஒழித்திடுவோம்
உளத்துடன் உலகினில் உயர்ந்திடுவோம்!
21. - கு. முதற்பாவலர், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

வருமிசை வெறுமிசை எனவருமேல்
வருபயன் எதுவென விளம்புவையே!
வருமிசை மொழிவழி வருமெனிலோ
உருக்கிடும் உளமதை உணருவையே!
22. - வே. இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

துயர்களை அகற்றியே இவ்வுலகில்
உயர்ந்திட நினைப்பவர் அயர்வின்றி
வயமொடு புயலென உழைத்தேநற்
பயன்தனை நொடியினில் பெற்றிடுவர்.
23.- க. அன்புக்கோகிலா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

பசியினால் அழிந்திடும் உயிர்கட்குப்
புசியென உணவினைத் தருபவரே
உசிதமாய் இறைவனின் பேரன்பைக்
கசிந்திடப் பெறுதலால் உய்வாரே.
24. - புலவர் அ. பக்கிரிசாமி, சுரக்குடி.

அன்பினில் திளைத்தவர் அழிவதுண்டோ?
மன்பதை வழுத்திட மாண்புறுவர்;
இன்புறு பொதுநலம் இயைந்துவிடின்,
வன்பொடு புகைச்சலும் வற்றிடுமே!
25. - நா. தண்டபாணி, அம்பல்.

கரும்புகை உமிழ்ந்திடும் கட்டுவெடி
திரும்பிடும் திசையெலாம் செவியதிர்ந்தே
தருந்துயர் அனைத்தையும் சிந்திப்பீர்!
விரும்பிடும் நிலைஇனி வந்திடவே!
26.- பாவலர் கு. தட்சணாமூர்த்தி, முதலியார்பேட்டை.

உலகினைத் திருத்துமுன் உனைத்திருத்து!
இலகெழில் தமிழினை ஈன்றவளைப்
பலவகைச் செயல்களால் பாழ்செய்வை!
இலக்கெலாம் பொருட்பறி; இழிவாழ்வே!
27. - இடித்துரை ஏந்தல், அரங்கண்டநல்லூர்.

இலக்கியம் அனைவரும் கற்றிடுவோம்
இலட்சியம் தமிழினில் படைத்திடுவோம்
இலக்கணம் இசைத்திட இணைந்திடுவோம்
கலைமகள் உயர்ந்திடப் போற்றிடுவோம்.
28. - இரா. சிவமுருகன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

புயலது குலைந்திடச் செய்திடினும்
பயலிவன் பயனிலை என்றிடினும்
கயவரும் சிலபல கூறிடினும்
உயர்ந்திட நினைத்திடு! தமிழாநீ!!
29. - தமிழன், தமிழ்நாடு.

இரு!இரு! துயரமும் விலகிவிடும்!
பொறு! பொறு! கவலையும் பறந்துவிடும்!
வருவது வளமிகு வழியாகும்!
பெறுவது புகழ்எனும் வாழ்வாகும்!
30. - கவிஞர். வேங்கட வரதன், பணங்குப்பம்.

சுரும்பமர் மலர்க்குழல் துடியிடையாள்
அரும்பிரு முறுவலை அணிமயிலாள்
புருவவில் வளைத்தவள் பூட்டிஅதில்
இருவிழி கணைகளை ஏன்தொடுத்தாள்?
31. - வி. சங்கர், பருத்திபுத்தூர்.

தெருவினில் கிடைக்கிற பொரியெல்லாம்
விருப்புடை மனத்துடன் சென்றங்கே
திருக்குளக் கயலிடம் அளிப்பாரே
திருவுடை மனிதரின் செயலதுவே!
32. - சு. இளவேனிலரசன், திருக்கோவிலூர்.

நிலமகள் இருசுடர் இடைகடந்தாள்
நிலவினில் எழுந்ததோர் இருள்செறிவு
புலவ(ர்)கள் புகுந்தனர் கற்பனையில்
கலைவளர் மதிக்கிது புதுக்குழலாம்.
33. - மு. இராம. கனகராசன், புதுவை.

தமிழ்மொழி அமுதென மகிழ்வுறுவோம்!
தமிழ்நிலம் நமதென முழக்கிடுவோம்!
தமிழ்இனம் உயர்வெனப் புகழிசைப்போம்!
தமிழ்நலம் கெடவரின் உயிர்கொடுப்போம்!
34. - கொட்டப்பட்டு, ப. சக்திவேலன்.

படிப்பகம்

www.padippakam.com



பதவியால் நிரம்பினீர் உறவானீர்
உதவியால் உயர்ந்தபின் மறந்திட்டீர்
பதவிதாம் அடைந்ததும் தமிழாலே
உதவிதாம் புரிவதும் அயலார்க்கோ?
35. - பாவலர் தேவமைந்தன், புதுவை.

கனவினில் கலைமக ளாய்வந்து
நினைவினில் நிலமக ளாய்நின்றே
எனதுவி ழியில்பதிந் தெந்நாளும்
புனிதமாய்த் தெரிபவள் என்அன்னை.
36. - அ. சரவணன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

இளைஞனே விழித்திரு உறங்கிடாதே
இளமையில் பயின்றிட மறந்திடாதே
உளமதில் கடமையை உணர்ந்துநீயும்
தெளிவுடன் உழைத்திட வெற்றிதானே!
37. - இரா. அருணாசலம், ஆனந்தா நகர்.

கதவது திறந்திடும் நேரமிது!
உதயமும் தெரிந்திடும் காலமிது!
இதயமும் மணந்திடும் தருணமிது!
கதைஎன எழுதிடு வாழ்வினைநீ?
38. - இரா. நிலவழகன், பனங்குப்பம்.

தமிழினை தமிழனே மறந்துவிட்டால்
தமிழினம் தழைத்திட வழிஉண்டோ!
தமிழினை உயர்த்திட முனைந்துவிட்டால்
தமிழ்மொழி தமிழனால் உயர்ந்திடாதோ!
39. - சி. சிவராசு, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

உழைத்திடும் உழவரின் துயர்நீங்கித்
தழைத்திட வழிகளை நாமெடுப்போம்
வழிபடும் இறைவனின் துணையுடனே
இழிபடும் உழவரைக் காத்திடுவோம்.
40.- செ. தமிழ்வாணன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

விழிநிறை அழகினைக் கைப்பிடிக்கப்
பழகிய உறவினை மறந்தாய்நீ!
எழில்மிகு செயலினைச் செய்துவிட்டால்
வழக்கமாய் நலன்களும் கைக்கூடும்!
41. - சே. இராசன், வைப்பூர்.

கனவினில் பயப்படா(து) எப்போதும்
நனவினில் நடுங்கியே இருப்பாய்நீ
மனதினில் களைந்திடா உன்நினைவை
தினந்தொறும் நினைக்கிறேன் மறவாமல்!
42. - சு. தென்றலரசன், திருக்கோயிலூர்.

பிடிக்கிற படிப்பினில் சேர்ந்துவிட்டுப்
படிப்பவள் புரிந்திடப் படித்துவிட்டால்
படித்ததை இளையவள் தெளிந்துகொண்டால்
படைத்திடக் கவியினை முனைந்திடலாம்.
43. - இரா. தையல்நாயகி, வேட்டவலம்.

தெருவினில் கிடக்கிற எனக்காக
அருளினை வழங்கியே காத்திட்டாய்
குருவென உனையுமே எண்ணிநானும்
உருகியே தினந்தினம் பாடிடுவேன்.
44. - செ. பாலமுருகன், ஆலகிராமம்.

தமிழனின் உயிரது தமிழாகும்!
தமிழரின் வழியது மெய்யாகும்!
தமிழினம் படைப்பது அறிவாகும்!
தமிழ்எனில் உலகதின் விடிவாகும்!
45. - இரா. சுடர்வண்ணன், சிதம்பரம்.

செழுந்தமிழ் எனக்குடை தருமானம்!
செழுந்தமிழ் எனக்குண வதுநாளும்!
செழுந்தமிழ் எனக்குயிர்! விரிவானம்
எழும்கதிர் எனப்புவி தொழவாழும்!
46. - கருவை. மு. குழந்தை, கரூர்.

இளகிய மனத்தினைப் பெற்றவளே
வளமிகு தமிழ்தனில் பேசிடுவாய்!
அழகிய விழிதனைக் கொண்டவளே
பழகிய நினைவினைப் போற்றிடுவாய்!
47. - க. சண்முக சிதம்பரம், தரகம்பட்டி.

பொதிகளைச் சுமந்திடக் குழந்தைகள்
புதியதாம் வணிகநோக் குடனிங்கே
மதிவளம் மனவளம் வழங்காமல்
சதியதே புரிகிறார் சண்டாளர்.
48. - தி.ப. சண்முகம், திருக்காடுதுறை.

இனமதம் எனும்பல இழைதிரித்தே
தினம்தினம் மதவெறி தனைத்திணித்தே
மனிதனின் தனித்துவம் பிழைபடற்கு
வினைபடும் வெறித்தனம் தனைத்தகர்ப்பாய்!
49. - புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி.

பொருளிலார் மதித்திட உயிர்வாழார்
பொருளினைத் தொழிலினால் அடையாமல்
அரசியல் தலைவரால் அடைந்திடவே
அறமிலா முறையிலே அலையாதீர்.
50. - புலவர் தி. பக்கிரிசாமி, திரு.பட்டினம்.

கதிரவன் அரசுதான் பகலெல்லாம்
மதியது அரசுதான் இரவெல்லாம்
விதியினை எழுதுவோன் இறையரசு
நதியது அலையென நாளெல்லாம்.
51. - கவிஞர். பாலசந்திரன் சேகபு, வேலூர்.

குறையெனின் கடிந்திடத் துணிந்திடுவேன்
நிறையெனின் புகழ்ந்தகம் மகிழ்ந்திடுவேன்
கறையுளத் துணைவரைக் களைந்திடுவேன்
மறைந்திட அயர்ந்திட விரும்பேன்நான்.
52. - பாச்சுடர். வளவ. துரையன், கடலூர்.

www.padippakam.com



திருமிகு தமிழினில் திருச்செந்தூர்
முருகனின் புகழ்களைத் திருவோடு
விருப்புடன் ஒருமனம் கொண்டோதின்
அருள்மழை பொழியுமே நம்வாழ்வில்!
53. - வீ. சிவபெருமாள், எ. வடக்குப்பம்.

மருள்தரும் செயலினில் மயங்காமல்
இருள்தரும் இடரினை யகற்றிடுவீர்!
பொருள்தரும் நலத்தினைப் போற்றாமல்
அருள்தரும் அறத்தினைச் செய்திடுவீர்!
54. - ச. திருநாவுக்கரசு, முசிரி.

நிலைத்திட உழைத்திடு வாய்என்றும்
கலைகளில் புவிதனில் பலநூல்கள்
அலைகளாய்த் திரண்டதைக் கனியாய்;கல்!
தலைநிமிர்ந் துலகிலே ஓங்கிடுவாய்!
55. - கு. அம்மச்சி, காலூர்.

வறுமையை விரட்டுதற் கியலவில்லை
சிறுமையை எளியவர்க் கிழைத்திழைத்துப்
பெருமையைக் கடைப்பிடித் துயர்வோரின்
வெறுமையை உலகினர்க் குணர்த்துவமே!
56. - புலவர் செ. இராமலிங்கன், புதுச்சேரி.

வலைஎன வலைஎன வலைவிரித்தே
மலைஎன மலைஎனப் பொருள்குவித்தே
உலகினை உலகினைத் தன் அடிக்கீழ்
உலவிடச் செய்கிற உளுத்தர்பாழ்!
57. - ஆ. கோவிந்தராசலு, கரிக்கலாம்பாக்கம்.

அறுசுவை உணவுடன் அணிமணியும்
பெறுநிலை யுடையவர் மகிழ்நகையால்
உறுபொருள் மறைவினில் குவித்திடுவார்!
வறுமையில் உழல்பவர் தவித்திடுவார்!
58. - மணி,

மனதினில் எழுதிட நின்னுருவைக்
கனவினில் நுழைந்திட முனைந்திட்டேன்
தனந்தனை மதித்திட நினைத்ததனால்
மனந்தனில் விலக்கிட விரும்பிட்டேன்!
59. - இரா. இராசராசன், கரூர்

அழிவுகள் அதிகமாய் வையமெலாம்
விழிகளை நனைக்கவே வைத்ததேனோ?
வழிவழி அழிவுகள் இவைதொடர்ந்தால்
வழியிலை செழிப்பிலை வாழ்வழிவே!
60. - ஆதவன்,

எளிமையர் இனிமையர் எழில்மறவர்
களிப்புடன் கனித்தமிழ் பொழிமழையர்
வளியென நிலைதமிழ் வாழ்நிலவர்
விளிபுகழ் படைக்களப் பாவலரே.
61. - தேன்மொழி, ஆர்க்காடு.

மொழிமொழி தமிழ்மொழி முதன்மொழியாம்
விழிவிழி தமிழ்மொழி விழிமொழியாம்
வழிவழி தமிழ்மொழி வளர்மொழியாம்
விழிப்புடன் தமிழரே விழித்திடுவோம்.
62. - படைக்களப் பாவலர், ஆர்க்காடு.

நிறைமணம் தவழ்ந்திடும் நன்மலருள்
குறைகுடம் தளும்பிய முகிழார்வாய்
அறமொழி தெரிந்திடாப் பிழைநடிகை
மறைபசுங் கிளிகளைப் பழிக்கலாமோ?
63. - மு. தமிழ்நிலவன், ஐயன்குடிப்பாளையம்.

புறவுபோல் பொலிவினன், நிறணிதூய்த்
துறவினன் எனப்பெரும் புகழ்விரித்தே
பிறமனை நினைவதே பெருந்தவமாய்ப்
பிறவியும் உலகினில் உலாவருமே!
64. - வில்லியன், புதுவை.

அமிழ்தெனும் தமிழ்மொழி நமதலவோ
இமிழ்கட லுலகினில் முதலலவோ!
தமிழ்மறை குறளது நமதலவோ!
தமிழ்இனம் உலகுறை முதலினமே!
65. - அகரமுதல்வி, பொன்மலை.

நிலமெலாம் உயிரெலாம் சிரழிய
நிலமகள் சினமென நிலநடுக்கம்
நிலமதில் வரவதின் காரணந்தான்
நிலம்மதப் பிரிவினைத் தீவிரமோ?
66. - கூலூர்க் கலைப்பித்தன்.

தமிழரின் பெரும்பகை தமக்குள்ளே
தமிழினம் சிதைந்ததாம் அதனாலே!
தமிழினம் தழைத்திட வேண்டுமெனில்
தமிழனைத் தலைவனாய்ச் செய்திடுவோம்.
67. - க. அரசு, பெங்களூர்.

உலகுய ருறுந்திற லுடையவனே!
பலகுடை நிழல்தரு பண்பினனே!
இலகுறு விலக்கிய நெறியினனே!
புலன்களை யியக்கிடும் பொற்புடையாய்!
68. - ஞானவன்,

விளங்குவ தனைத்தையும் வென்றெடுக்கக்
கிளர்ந்தெழுந் திழைத்திடின் கிட்டுமெனத்
தளர்ந்திடாக் களமரின் தாளாண்மை
கிளத்துதற் கிடனிலை கேளிதனை.
69. - புலவர். த. ஆறுமுகம், சென்னை.

பயன்விளை செயல்தனை அன்றுமின்றும்
கயவரே தடுக்கிறார் அறிந்தஉண்மை!
அயர்விலா உழைப்பினால் வெற்றிகண்டே
உயர்ந்தவர் பலருளார் இந்நிலத்தே!
70. - இரா. அருமருந்தலைவன், திருமருகல்.

www.padippakam.com



கடல்சின மடைந்ததால் கதியிழந்தோர்
உடைஉண விருப்பிடம் வேண்டிநின்றார்
கடகடக் கடலென நிதிகுவிய
இடைத்தர கடைபவர் மனமகிழ்ந்தார்!
71. - அரிமா இளங்கண்ணன், சென்னை.

வரவரத் தமிழரின் வாழ்வினிலே
மரமரத் திடும்நிலை மண்டுவதால்
பரபரப் புடைதமிழ்ப் பண்பாடு
சொரசொரப் பிலாமலே சாவதுவோ?
72. - தெ. முருகசாமி, புதுவை.

துடிப்புடன் நடப்பதால் துன்பமில்லை!
கடிந்திடும் சினம்விட எதிரியில்லை!
படி! படி! எழுதிடு பயமில்லை!
படிப்படி உயர்வுதான் அதன்எல்லை!
73. - ஆ. முகிலரசி, ஆர்க்காடு.

பழிப்பினும் உதவிடு பரிவுகிட்டும்!
செழிப்புடன் சிறந்திடச் சிறப்புகிட்டும்!
விழித்துநீ படித்திடு வெற்றிகிட்டும்!
மொழிதமிழ் அறிந்திடு முதன்மைகிட்டும்!
74. - ஆ. சோதிமலர், ஆ.சி.ம.ம.கல்லூரி.

இளங்கதிர்ப் பொழுதினில் தொலைக்காட்சி
வளமுடன் கடும்பகல் தொலைக்காட்சி
தளர்ந்திடா திரவினில் தொலைக்காட்சி
இளமையில் கருதிடின் பயனென்ன!
75. - வாழியூர் வே. இராசவேலன்.

பொறுமையில் உனைக்கெதிர் புவியினிலே
பொறுப்பவர் எவரெனப் புகழ்ந்திருந்தோம்!
பொறுத்திடா அழிவினைப் புரிந்ததனால்
பொறுமையாய் இனியெது புகல்மண்ணே!
76. - ஆர்க்காடு. அமுதோன்.

திரையினில் வருவதே வாழ்க்கையெனத்
திரையினை விருப்புடன் கண்டுவப்பார்
அரைகுறை அறிவினர்! அவர்வழியில்
விரைபவர் விரைவினில் வீழ்பவரே!
77. - சோழமாமல்லன்.

பொழுதினும் தனதுடல் மிகவருத்தி
உழைத்திடும் எளிமையர் யாவருமே
பழுதிலா நிலைதனில் வாழ்ந்திடவோர்
வழிதனை வகுத்திடல் முறையாமே!
78. - பெருமாங்குப்பம் சா. சம்பத்து.

அருளொடு புலமையும் அடைந்தவரார்?
முருகியல் ததும்பிடும் முத்தமிழில்
தருவென கனியுகு தரமுடையார்
அருஞ்சொலில் திளைத்திடும் ஆற்றலரே!
79. - சு. இலம்போதரன், சென்னை.

தமிழனாய் இருந்திடு தமிழ்மண்ணில்
தமிழனாய் வளர்ந்திடு! தாயகத்தின்
தமிழ்மொழி செழித்திடச் தமிழ்நிலத்தில்
தமிழனாய் உயர்ந்திடு! உய்வாயே!
80. - இரா.கு. அரங்கசாமி, தங்கவயல்.

இலக்கியம் படைத்தது நற்றமிழே!
இலக்கணம் வகுத்தது முத்தமிழே!
புலவராம் குழந்தையின் இலக்கியத்தை
நலமுடம் படித்துநாம் பயன்பெறுவோம்
81. - வி. இராதா, கெடார்.

தமிழிலே உரைத்திடத் தயக்கமுற்றுத்
தமிழையே படித்திட மறுத்திங்கே
தமிழையே இழித்துரைத் தினங்கெடுக்கும்
தமிழரைத் தமிழ்மொழி அழித்திடுமோ!
82. - ஆறு. அன்னக்கிளி, காரைக்குடி.

துணிவுடன் உழைப்பவர் உள்ளத்தில்
பிணிகளும் நெருங்கிடா மலைபோலே
பணிகளும் குவிந்திடா மாநிலமும்
பணிந்திடும் உழைத்திடு நேரத்தில்.
83. - ஏ. முருகவேணி, தென்நெற்குணம்.

மனதிலே நிலைத்தவள் மாற்றானை
மணம்புரிந் திடும்நிலை வந்தால்நல்
நினைவுகள் நிலைதடு மாறும்நம்
கனவுகள் கலைந்திடும் காதல்வீண்.
84. - அ. செயபால், மயிலம்.

கலகல எனத்தினம் சிரித்தாலே
கலங்கிடு மனமது களிப்பாகும்
குளுகுளு மனத்தினில் கும்மாளம்
சிலுசிலு எனவரும் சீரெல்லாம்!
85. - த. பார்த்திபன், திண்டிவனம்.

சிலையென உலகினில் இருப்பவளே
அலையென இழிந்தவர் விரைந்திடினும்;
மலையென உயர்ந்திருந் தருளுமுனை
மலைப்பது பிறந்திடும் நினைக்கயிலே;
86. - இரா. அபிராமி, மயிலம்.

கடல்கடந் துவாழ்மகன் கருத்தாய்த்தன்
உடல்உழைத் தனுப்பிடும் பணத்தினிலும்
புடலென வளர்ந்திடும் பெயர்த்திப்பெண்
மடல்தரும் மகிழ்ச்சியில் மனம்மயங்கும்.
87. - த. கருணைச்சாமி, தேனி.

பனிநிகர் மலரெனப் பெண்கவியே
நனிமிகு சுவைதரும் பொருளெனநாம்
நினைத்திடல் பழுததாம் சொல்வேன்கேள்
வினைமிகு செயலதை முடிப்பருண்மை
88. - கோ. முத்துச்செல்வி, செங்கம்.

www.padippakam.com



இயற்கையின் எழிலினை வளர்த்திடுவோம்
செயற்கையின் வளர்ச்சியை அழித்திடுவோம்
இயற்கையைச் சுவைத்திட எண்ணிடுவோம்
அயர்விலா மகிழ்ச்சியை நாடிடுவோம்.
89. **- இர. கிருட்டிணமூர்த்தி, மயிலம்.**

நிலையிலா உலகிது தெரிந்துணர்க
அலைதவழ் கடலது பேரலையால்
உலகினர் உணர்ந்திட வைத்ததம்மா!
நிலையெனப் புவியினை எண்ணவேண்டா!
90. **- கு. கோவிந்தன், செங்கம்.**

வயலினில் பணிசெயும் மாந்தரெலாம்
அயலவர் நலந்தனை ஆக்குபவர்;
இயன்றிடும் வகைதனில் அவர்க்குதவ
முயலுக அவர்நலம் மூண்டிடவே.
91. **- த. தட்சணாமூர்த்தி, தி.ரா.பட்டினம்.**

பயின்றிட அருளுக முருகனேஉன்
பெயர்புகழ் நலமுடன் பாடிடவே!
துயரெலாம் அகற்றிடு! திருமாலே
செயலெனத் திருமுகம் கண்டிடவே!
92. **- மு. ஆனந்தன், திரு.கொ.அ.க.கல்லூரி.**

படிபடி பலபல நூல்களையும்
நடிப்பினால் உயர்ந்திட நினையாமல்
கடினமாய் உழைத்திடு பயன்விளையும்
துடிப்புடன் செயல்படு எந்நாளும்.
93. **- சு. முகிலரசன், திருக்கோவிலூர்.**

உழைப்பவர் கரங்களோ பூப்பறிக்கப்
பிழைப்பவர் கரங்களோ கத்திதூக்கக்
குழைபவர் கரங்களோ தாளமிடப்
பழையசெய் திநீளுதே மாறாதோ?
94. **- இரா. அர்ச்சுனன், தென்நெற்குணம்.**

கருவினில் உருவினைக் கொடுத்தவரே
தெருவினில் தருவென விட்டுவிட்டுப்
பிறவியில் துறவியாய் வாழ்ந்திடவா
புறவியாய் மறுவுடன் ஓடிவிட்டாய்?
95.**- த. சாந்தினிபாய், சி.பா.சு.தமிழ்க் கல்லூரி.**

உறங்கிய மனமென நினையாதே
திறமது திடமுடன் உனக்குண்டு!
மறந்தனை தினம்தினம்விதைத்தாலே
புறந்தரா துயர்குவாய் உழைப்பாலே!
96. **- த. பார்த்திபன், சி.பா.சு.தமிழ்க் கல்லூரி.**

நிலவென தமிழ்மொழி இங்கிருக்கக்
கலப்பட மொழிகளைத் தேடுகிறான்!
புலம்பெயர் தமிழனோ அனுதினமும்
உலகினில் தமிழினைப் பரப்புகிறான்!
97. **- க.வி. சனார்த்தனன், காஞ்சிபுரம்.**

கருவிலே துயரினைத் தந்தவனே
வருத்தமே நிறைந்ததே என்வாழ்வில்!
கருத்துமே கலைந்ததே கடவுளேஎன்
உருவமே உருப்பெற அருள்தருவாய்!
98. **- அ. சோலைத்தென்றல், தென்நெற்குணம்.**

அழகினைத் தினம்தினம் சுவைத்திடுவோம்
பழகின முறைதனை நினைத்திடுவோம்
எழில்மிகு குரலினைக் கேட்டிடுவோம்
உழைப்பினை உலகினில் கொடுத்திடுவோம்.
99. **- வே. மாயக்கிருட்டிணன், வானூர்.**

தமிழினைத் தினம்தினம் வணங்கிடுவோம்
அமிழ்தெனத் தமிழினை எண்ணிடுவோம்
தமிழினைச் சுமையென எண்ணிடுவோர்
உமியென உலகினில் இருப்பாரே!
100. **- அன்னை இராதாபாய், வானூர்.**

வருவது வரட்டுமே வாடுவதேன்?
தருவது தரட்டுமே தயங்குவதேன்?
ஒருமுறை விழுந்திடின் ஓயுவதோ?
மறுபடி முயன்றிடின் வெல்வாயே!
101. **- க. செயந்தி, பனங்குப்பம்.**

விழுபவன் எழுந்திடக் கூடுமெனின்
அழுபவன் சிரித்திடக் கூடுமெனின்
உழுபவன் வறுமையை விடுத்தேதான்
எழுவதும் சிரிப்பதும் எக்காலம்?
102. **- பா. விசயலட்சுமி, கோலியனூர்.**

மலையென இடரெதிர் வந்தாலும்
அலையெனத் துயரது தந்தாலும்
நிலையினில் குலைந்துநாம் போகாமல்
நிலைத்திட எதிர்த்ததை நிற்போமே!
103. **- சி. பாலகிருட்டிணன், கோலியனூர்.**

உழைப்பவன் உலகினில் வாழ்ந்திடுவான்
இழைப்பவன் இடரதில் வீழ்ந்திடுவான்
பிழைப்பவன் பிறரது நிழல்தன்னில்
தழைத்திட வழியெதும் உண்டோ? சொல்!
104. **- பா. கலைச்செல்வம், கோலியனூர்.**

எனதரு மொழியது செழித்தோங்க
எனதரும் பணியினைச் செய்வேனே!
எனதரு மொழிக்கொரு கேடென்றால்
எனதுயிர் கொடுத்ததைக் காப்பேனே!
105. **- தமிழமுதன், இராம்பாக்கம்.**

விதியினை எதிர்த்துநீ போராட
மதியதே துணையென அறிவாயே!
மதியுடன் தொடர்ந்துநீ முயன்றாலே
விதியது புறமுது கிட்டிடுமே!
106. **- பா. கல்பனா, பழைய கருவாட்சி.**

www.padippakam.com



நினைவினில் உனதுரு தோன்றியதால்
மனதினில் முழுவதும் நிறைந்தாய் நீ!
பனியிலே மலர்ந்தசெந் தாமரையாய்க்
கனவிலே உருவமாய்க் காட்சியானாய்!
107. - உ. பிரபாகரன், வந்தவாசி.

ஒழுக்கமே உயர்வினை அளித்திடலால்
ஒழுங்கினை உயிரென மதித்திடுவர்!
ஒழுங்கிலார் அழிவினை அறிந்திடுவோர்
ஒழுங்கினைக் கடைபிடித் தொழுகுவரே!
108. - தி. உசாதிருநாவுக்கரசு, விழுப்புரம்.

முதல்வரும் துணைவரும் முறையுடனே
முதலினை முடிவினை உணர்பவராய்
முதலிலே செயலினை வகுத்திடலே
முதலிடம் நிறுவனம் பெறுமெனலாம்!
109. - கு. செல்வக்குமாரன், வீரசோழபுரம்.

மகளிரும் குழவியு மிலாக்குடும்பம்
முகமிலா உடலமே அறிந்திடுவீர்!
அகமிலா மனிதனை விரும்புவரோ?
அகமலர் குழவியர் வேண்டுவமே!
110. - தி. கதிரவன், விழுப்புரம்.

உடுத்தலும் உறங்கலும் உண்ணலுமே
எடுத்ததின் பயனென எண்ணாமல்
அடுத்தினி அவனியுள் வாழ்ந்தோங்கத்
தொடுத்திடு புதுப்பணி துவளாமல்!
111. - து. சுப்பராயலு, பெரியகுளம்.

நிறைமொழிப் பெரியவர் நவில்கின்ற
மறைமொழி பயன்தரும் மந்திரமாம்
கறையிலாத் திருக்குறள் கற்றிடுவோம்
நிறைபுகழ் நிலைபெற வாழ்ந்திடுவோம்.
112. - ஆ.வே. இராமசாமி, வைரிசெட்டிப்பாளையம்.

சிவனிடம் பணிந்துநின் றே;நித்தம்
தவமிரந் து;வேண்டின் மனதிற்குள்
புவனமெ ன;வான்மதி யும்;வந்தால்
தவக்கமின் றி;நெஞ்சமும் உவக்குமன்றோ!
113. - க.ச. மூர்த்தி, தி.கெ.அ. க.கல்லூரி.

மனத்தினில் மலங்களும் நிறைந்துவிட்டால்
குணத்தினில் சிறந்திடல் அரிதாமே!
மனத்தினை உயிரினில் கலந்திட்டால்
அனைத்துமே நமக்கினி எனிதாமே.
114. - சா. சாகிதா, தி.கெ.அ. க.கல்லூரி.

பயிற்சியில் மகிழ்வினைப் பெறுவதிலே
பயிற்சியர் குறியென இருந்திடலால்
பயிற்றுநர் உழைப்புமே சிறப்புடைத்தாய்ப்
பயிற்சியர் குறியினை நிறைவுசெயும்!
115. - கு. சுசீலா, விழுப்புரம்.

புவியுளார் புகழ்பெற வசித்திடவும்
புவியிலே நலம்பல விளைந்திடவும்
குவிந்திடும் இயக்கமும் முனைந்திடினே,
குவியுமே வளம்பல; குறைகளில!
116. - செ. பொன்னம்மாள், செஞ்சிக்கோட்டை.

மனமகிழ் மனைவியும் விலைமகளும்
இனத்திலே மகளிரே! மணத்தலினால்
மனம் நிறைத் திடுபவள் மனைவியென
இனம்பிரித் துணர்பவர் உயர்வாரே!
117. - மு. செந்தில்குமார், செஞ்சிக்கோட்டை.

அயர்விலா உழைப்பினன் நாடோறும்
உயர்வினைக் குறைவிலா(து) அடைந்திடுவன்
முயற்சியில் குறைவிலான் முழுவதுமாய்
அயலவர் நலன்கரு திடும்குணத்தான்.
118.- சி. அமுதா, சுசிலா ஆ.ப.நி. வீரசோழபுரம்.

விதியினும் சதியினைக் கொடியதென்பேன்
மதியினால் விதியினை விலக்கிடலாம்
சதியினைப் புரிந்திடல் எளிதாமோ?
மதயுளார் சதியினை அறுத்திடுவர்!
119. - பெ. இரவி, விழுப்புரம்.

அணிமணி பலவுமே பெருமளவாய்
அணித்திரள் உறவுமே வெகுமதியாய்ப்
பணிபல வகித்திடும் மனிதரெலாம்
பிணியிலா வசிப்பினைப் பெறுபவரே!?
120. - தி. மணிமேகலை, விழுப்புரம்.

குறையிலா மனத்திலே வாய்மையோங்கும்
கறையிலா இரமதில் நேர்மையோங்கும்
கரையிலா நதியினால் அழிவோங்கும்
முறையிலா உறவினால் மரணமோங்கும்!
121. - ஏர்முனை மூ. குழ. மூர்த்தி, கரூர்.

வெறிக்குணம் தவிர்த்திடு வெற்றிகாண்பாய்!
புறஞ்சொலல் அழித்திடு புனிதனாவாய்!
நிறைமனம் உயர்த்திடு இனியனாவாய்!
அறச்சுமை வளர்த்திடு மனிதனாவாய்!
122. - ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

பகைவரும் பரிவுடன் இருந்திடுவர்
வகையுடன் உபசரித் தினிதுரைப்பர்
தொகையினை உவந்தளித் திடத்துணிவர்
புகையெனும் பகைவரே கொடியவராம்!
123. - இர. தெய்வானை, சுசிலா ஆ.ப.நி.

நெறியுளார் நெறியினை நிறைவுடனே
நெறிமுறை அறிந்தவர் குறியுடனே
வெறியென விரும்பிய உணர்வுடனே
குறியினில் சிறிதுமே தவறிடாரே!
124. - இரா. அரங்கநாதன், சுசிலா ஆ.ப.நி.

படிப்பகம்

www.padippakam.com



உயர்ந்திட முயன்றிடும் ஒருவனுக்கே
அயர்வுமே தெரிந்திடா நிலையினதே
முயற்சியின் முடிவிலே மகிழ்த்திடுவன்
வியத்தகு நிலையினை அடைந்திடுவன்.
125. - இர. கணேசு, சென்னை.

கணவனும் மனைவியும் கருத்தினராய்
இணக்கமாய் மனையறம் உடையவராய்க்
குணத்தினால் சிறந்திட வசிப்பராயின்
பணக்குறை பிணக்குகள் வருதலில!
126. - ஆ. இரவிச்சந்திரன், சென்னை.

கருத்திலா மனிதனை மனிதனெனக்
கருத்துளோர் கருதிடார் வெறுப்பினாலே!
உருத்திடும் உளத்தினால் கருத்திலாரும்
கருத்தினை மனத்தினில் இருத்துவரே.
127. - இர. சாலினி, சென்னை.

குலமகள் புகழினை நினைத்திடவே
இலமெனத் துயருமே பறந்திடும்காண்!
குலத்துளார் உளத்திலே அருள்சுரக்கும்
குலமகள் அவரென உணருவீரே!
128. - தி. தமிழ்க்கொடி, உளுந்தூர்பேட்டை.

ஒளிவிளக் கினையணி பெறஅடுக்கி
வெளியிலும் உளத்திலும் மகிழ்வினாலே
ஒளிர்ந்திடும் வசிப்பினை அளித்திடென
ஒளிப்பிழம் பனையனை வணங்கிடுவோம்!
129. - அர. இளம்பூரணன், தொழுதூர்.

கடமையை மறந்திடும் நிலையினிலே
மடமையைப் போற்றிடும் வழியினிலே
உடைமையைச் சேர்ந்திடும் உளத்தினிலே
கொடுமைகள் குடியினைப் பெற்றிடுமே!
130. - எழிலன், சென்னை.

வறியவர் வருந்திடல் அறிந்திடாது
குறியுடன் பறித்தலைப் புரிந்திடுவோர்
நெறியிலா நிலையினில் வசித்திடலை
அறிந்திடு திருந்திடு தமிழினமே!
131. - ச. புட்பா, புதுக்கோட்டை.

அறிவியல் அறிந்திடல் முறையாமே!
அறிவினை வளர்த்திடல் செழித்திடவே!
அறிந்தன உணர்த்திட நலம்பெருகும்!
செறிவினைத் தருவது அறிவியலே!
132. - த. பாண்டியன், சுசிலா ஆ.ப.நி.

இனித்திடும் கனியினின் சுவையெனலாம்
பனித்துளி பனையுரு அளித்தலைப்போல்
நனியுயர் அருங்கவித் திறந்தினாலே
தனித்திறன் குறளமு தெனப்பகர்வர்.
133. கொ. எட்டையக்கவுண்டர், சுசிலா ஆ.ப.நி.

மலர்ந்திடும் மலரினை நுகர்ந்திடுவாய்!
மலர்ச்சியை வசிப்பினில் உணர்ந்திடுவாய்!
மலர்ந்திடும் மலர்ச்சியே மகிழ்வெனலாம்
மலரினின் மணத்தினால் குலம் சிறக்கும்!
134. - அர. கிரிசாநாதன், இரிசிவந்தியம்.

விழியினைப் பெறுதலால் வழியறிவோம்!
வழியினை நெறியுடன் அறிந்திடுவோம்!
மொழியினை விழியென உணர்ந்திடுவோம்!
பழியிலா வசிப்பினைப் பெறுவதற்கே!
135. - ஆ. இராசு, இரிசிவந்தியம்.

தெளிவிலா அறிவினர் மருத்துவத்தால்
துளியுமே பலனிலை நலிவடைந்தார்
தெளிவுறு இயல்புடன் தழைத்திடவே
அளித்திடு மருந்தென வருதலைக்காண்!
136. - கி. பாண்டுரங்கன், இரிசிவந்தியம்.

அருந்தமி ழினிதென அறிந்திடாதார்
கருத்திலாக் கடுமொழி மயக்கிடவே
உருவிலாத் திருவிலா தொருமொழியை
உருவடித் துருவினை இழந்தனரே.
137. - இரா. தெய்வீகன், சங்கராபுரம்.

தமிழ்மொழி தழைத்திடத் தமிழினமே
தமிழெழு திடுதமிழ் படித்திடென
அமிழ்தினும் இனித்திடும் அன்னைமொழி
தமிழ்க்கவி பகன்றனன் சிறப்புடனே.
138. - இரா. சதாசிவம், இரிசிவந்தியம்.

நலம்புரி மனிதரும் புதைகுழியில்
பலனிலாப் பதருகள் அரியணையில்
நிலமகள் நிலையிழந் துழலுகிறாள்
குலக்கொழுந் தினைத்தலை நிமிர்த்திடுவீர்!
139. - த. சந்திரசேகரன், புதுக்கோட்டை.

அழகினில் மயங்கிடும் தலைமகனே!
அழகினைப் பருகிடும் விருப்பினுடன்
அழகினைக் கருத்தொடு காத்திடுவாய்!
அழகிய மனைவியை அறிந்திடுவாய்!
140. - இரா. தயாபரன், அரியலூர்.

தகுதியில் உயர்வினைப் பெறுபவரும்
மிகுதியாய்ப் பொறுப்பினை வகித்திடலால்
வெகுவிலே மதியினை இழந்தவராய்
வெகுளியாய்த் தகுதியில் இழிந்திடுவர்.
141. - க. சினிவாசன், சுசிலா ஆ.ப.நி.

கனிவுடன் இனியராய்ப் பழகிடுவர்
தனியராய் எதிர்கொள விரும்பிடுவர்
பனியென உருகுவர் பரிதவிப்பர்
இனியன நிகழ்ந்ததும் ஒளிந்திடுவர்.
142 கோ. கலியபெருமாள், விழுப்புரம்.

www.padippakam.com



குழுவியின் இதழ்முகை மலர்ந்துவிட்டால்
இழப்பினால் வரும்பிணி பறந்துவிடும்
அழகிய மழலையைச் செவிமடுத்தால்
பழங்களும் சுவைகளை இழந்துவிடும்.
143. - வீ. வில்வநாதன், வெங்காலூர்.

அதிபதி புவிதனில் வானதியே!
விதியினை அவள்மதி வென்றிடுமே!
நிதம்நிதம் நடமிடும் அவளிடமே!
கதியவள் எனக்கொளும் உலகமுமே!
144. - அழகுநிலவு, சகாதேவன்பேட்டை.

நினைவிலும் நனவிலும் நிலையாகி
மனத்திலும் அகத்திலும் அலையாகித்
தினம்தினம் விழியிலும் சுவையாகி
மணந்திடும் அருள்மிகு சுடர்நிலவே!
145. - முகில்கடலி, விழுப்புரம்.

அசுவினின் சிரிப்பதில் பொருளுண்டு
உசுப்பிடும் படிப்பினில் சிறப்புண்டு!
விசும்பதின் துளியினில் விளைவுண்டு!
விசும்பிடா வழியினில் உயர்வுண்டு
146. - அசுவின் ஆர்த்தி, தெள்ளார்.

அறிவுரை எதனையும் மதித்தறியாள்
அறிவுடன் எதனையும் செய்தறியாள்!
அறிவதும் தெரிவதும் அவள் போக்கே!
அறிந்துளர் அவளையும் புவிதன்னில்!
147. - த. இராசலட்சுமி, விழுப்புரம்.

துணிவினைத் துணையெனப் பெறுபவரே
அணிபெறப் பணியினில் சிறந்திடுவர்.
பணிவுடன் அணிபெறப் பணிபுரிவோர்
பணியொடும் அணியினை இழந்திடுவர்.
148. - க. பாலமுருகன், விழுப்புரம்.

அரசியல் புயலது வருமிங்கே!
இரவதும் பகலென மாறுமிங்கே!
இரவியும் நிலவதும் தவழுமிங்கே!
நிரந்தரம் எதுவெனக் காண்கிலமே!
149. - ஒளிவண்ணன், பனங்குப்பம்.

மழையினை மகிழ்வுடன் அளித்திடுவன்!
அழைப்பினை அமுதெனக் கருதிடுவன்!
தழைத்திடும் வசிப்பினை வழங்கிடுவன்!
உழைத்திட உயர்வினை அருளிடுவன்!
150. - அர. அருண்குமார், விழுப்புரம்.

உலகினை நலமபெறச் செய்திடுவோம்
நலம்பெறப் படிப்பினைப் பெற்றிடுவோம்
வளம்பெற உழைப்பினைக் கொடுத்திடுவோம்
களவிலா விடுதலை அடைந்திடுவோம்.
151. - வ. அரிகிருட்டிணன், மயிலம்.

இலக்கண நடையினில் கற்றிடுவோம்
இலக்கிய மொழியினில் எழுதிடுவோம்
கலைகளில் சிறந்திடச் செயல்படுவோம்
உலகினில் நலம்பெற உழைத்திடுவோம்.
152. - க. பரமசிவம், விழுப்புரம்.

மகளிரை மதித்திட நினைத்திடுவோம்
இகலறப் பழகிடப் பண்படுவோம்.
பகைவரை அளியராய் மாற்றிடுவோம்
இகழ்வதை அனைவரும் மறந்திடுவோம்.
153. - கி. இலட்சுமணன், மயிலம்.

இரும்பெனக் கரங்களை உருமாற்றி
அரும்பிய பகையினை அழிக்காமல்
பருகிய அமுதொடு தாய்தந்த
அருந்தமிழ் அழிப்பதைப் பார்ப்பதுவோ!
154. - பாவலர் கருமலைத் தமிழாழன், ஒசூர்.

படிப்புடன் ஒழுக்கமும் அமைந்திடவே
துடிப்புடன் பணிகளில் தொடர்பவர்கள்
பிடிப்புடன் புரிந்திடும் அருஞ்செயலால்
நடிப்புடன் பிழைப்பவர் விழுந்திடுவார்!
155. - குமரிச்செழியன், சென்னை.

தமிழனும் தமிழனும் உரையாடின்
தமிழுமே இடம்பெற விலையாமே
அமையவ னுடனவ னப்பனுமே
அமைவுறக் கலந்துயிர்ப் பதுதமிழாம்
156.- கோவி. கலியபெருமாள், அரியாங்குப்பம்.

தெருவினில் விளக்கினைப் பொருத்திடுவோம்
கருவினில் குழந்தையை வளர்த்திடுவோம்
இரவினில் படித்திடப் பழகிடுவோம்
பிரிவினை உலகினில் அழித்திடுவோம்.
157. - இரா. அருள், மயிலம்.

இருப்பவர் இறந்தவர் ஆகின்றார்
இருந்ததை மறப்பதா? இல்லாத
பெருங்குறை நினைப்பதா? பேசியநல்
கருததினைச் சுவைப்பதா? சொல்மனமே!
158. - அண்ணா. தருமலிங்கம், புதுவை.

விழி!எழு! தமிழினை வளமாக்கு!
பழி,களை தமிழனின் துயர்நீக்கு!
விழி,துடை தமிழனே எதிர்நோக்கு!
அழிவது பகைவரே அறிந்திடு!
159. - ஆ. அறிவரசன், புதுச்சேரி.

கெடுவது தமிழின நலமென்றால்
நெடுமர மெனக்கிடப் பதுஞ்சரியோ!
கொடுமைநீக் கிடப்புலி யெனப்பாய்வாய்
வடுக்களும் தொலைந்திடும், வாழ்வாயே!
160. - சோ. இளஞ்செழியன், புதுச்சேரி.

www.padippakam.com



வடித்திட இலக்கினை வாழ்வுயரும்
முடித்திடு பகையினை அன்புயரும்
படித்திடு குறளினை நீயுயர்வாய்
துடித்துநீ எழுந்திடு தமிழுயரும்!
161. - சோ. கனிமொழி, புதுச்சேரி.

பிறப்பதும் உலகினில் ஒருமுறையே
இறப்பது தெரிந்திடா இவ்வுலகில்
துறப்பது பிறமொழி; பற்றென்றால்
சிறப்பது தமிழரின் வாழ்வாமே!
162. - சோ. அருமைசுந்தரி, புதுச்சேரி.

அறிவியல் கலையியல் அரசியல்,மெய்
மறையியல் இவற்றொடு வளர்ந்துவரும்
பிறஇயல் அனைத்தையும் விளக்கிடுசொற்
செறிவுடை மொழி,அது செழுந்தமிழே!
163. - திருவாணன், திண்டுக்கல்.

மலைகளும் மரங்களும் மாக்களுமே
வளங்களை வழங்கிட மறுப்பதில்லை
நலம்பெறும் வழிகளே அற்றார்க்கே
உளமகிழ் உதவிகள் செய்திடுவீர்!
164. - கவிஞர் பெ. போத்தி, மதுரை.

பொதுமறை திருக்குறள் பயின்றிடுவோர்
புதுமுறை பலவுமே அறிந்திடலாம்
மதுநிறை மலரினை விரும்புபவர்
மதுவெனத் திருக்குறள் பயின்றிடுவீர்!
165. - க. குப்புசாமி, இரிசிவந்தியம்.

நினைத்திடும் மனதினில் அருள்தந்து
வினைகளைக் கனிவுடன் செய்திடுவாள்
நினைவினை வளர்த்திடும் தேவிஅவள்
மனைதனை நெறியுடன் காப்பவளே!
166. - கே. வீரவேல், திரு.கொ.அ.க.கல்லூரி.

நலந்தரும் கருத்துகள் வாழ்வினிலே
பலன்தரும் செயல்களாய் மாறிடுமே!
செலவுகள் உலகிலே குறைந்திருந்தால்
நலமுடன் இருக்கலாம் வாழ்வினிலே!
167. - தி. உரூபன், மாரனோடை

தமிழ்மொழி தழைத்திட முயன்றிடுவேன்
தமிழினிச் சிறந்திட உழைத்திடுவேன்
தமிழினை அமிழ்தெனப் பருகிடுவேன்
தமிழ்நெறி தரணியில் நமை உயர்த்தும்.
168. - ச. அம்சத்கான், கள்ளக்குறிச்சி.

நடந்தது நினைவிலே குடியிருந்தால்
நடப்பதும் எதுவெனத் தெரியுமாசொல்?
நடந்தது முடிந்ததாம் எனக்கொண்டால்
நடப்பதை நலமுடன் முடித்திடலாம்!
169. - பா. மாயக்கண்ணன், சுசிலா ஆ.ப.நி.

தமிழ்மொழி தமிழரின் உயிர்மொழியாம்
தமிழினம் தமிழினை வணங்கிடுமாம்
தமிழுமே தரணியில் தழைத்திடத்தான்
தமிழிலே தயங்கிடா(து) எழுதிடுவீர்!
170. - சு. விக்ரானந்து, கள்ளக்குறிச்சி.

தயக்கமே உயர்வினை தடுத்துவிடும்
தயங்கிடா நிலையினில் பழகிவிடு!
முயங்கியே திறத்தினை வளர்த்திடலால்
மயங்கியே மருளுதல் ஒழிந்திடுமே!
171. - மு.சு.சமீம்பேகம், சுசிலா ஆ.ப.நி.

நிறுவனப் பெயரினைக் கருத்துடனே
நிறுவிய நிறுவனர் மகிழ்ந்திடவே
மறுப்பிலாப் பொறுப்பினன் இவனெனவும்
பொறுப்புளார் புகழ்ந்திட நடந்திடுவேன்.
172. - இ. சங்கீதா, சுசிலா ஆ.ப.நி.

விடியலில் விரைந்தெழ நினைத்திடுவோம்
படிப்பதை மனத்தினில் நிறுத்திடலாம்
நொடியினில் நினைத்ததை முடித்திடலாம்
கொடியதும் எளியதாய் முடிந்திடுமே!
173. - ம. ஏழுமலை, கள்ளக்குறிச்சி.

உழைப்பினை உணர்ந்திட உழைத்திடுவோம்
உழைப்பவன் வளமுடன் பயிர்களையே
தழைத்திடப் பயிரிடின் புவிமுழுதும்
மழைவளம் பெறுவதால் வளம்பெறுமே.
174. - ஆ. விசயகுமார், சுசிலா ஆ.ப.நி.

கலைஞரின் கவிநயம் அமுதெனலாம்
கலைஞரின் உரைநடை தெளிவெனலாம்
கலைஞரின் அரசினால் உயர்வெனலாம்
கலைஞரின் உயிரினைத் தமிழெனலாம்!
175. - இரா. சத்தியா, சுசிலா ஆ.ப.நி.

அழகிய மயிலினம் ஆடிடவும்
உழவினில் வயல்விளை வோங்கிடவும்
முழங்கிடும் முகில்மழை முத்தெனவே
வழங்கிடும் இயற்கையில் வன்முறைஏன்?
176.- மணிமேகலை குப்புசாமி, குறிஞ்சிநகர்.

படிப்பவர் படிப்பதை மனத்திருத்திப்
படிப்பினில் சிறந்திட முயல்வராயின்
படிப்பினால் சிறப்பினை அடைந்திடுவர்
படிப்பதைப் படித்திடப் புகழடைவர்.
177. - ப. அருள் முருகன், சுசிலா ஆ.ப.நி.

இலக்கியம் இயம்பிடும் கருத்தினையே
நலம்பெற மனிதரும் கடைப்பிடிக்க
உலகமும் உயர்ந்திட வழிபிறக்கும்
கலகமும் குறைந்திட வழிவகுக்கும்.
178. - ச. நாகராசன், விராலிமலை.

www.padippakam.com



வசிப்பினில் வளப்பமும் பெருகிடவே
வசித்திடும் புவியினை உயர்த்திடவே
வசிப்பவர் மொழிந்திடும் மொழியினையே
வசியமாய்க் கருதிடும் நிலையறிவீர்!
179. - பெ. கலியபெருமாள், இரிசிவந்தியம்.

கவியுளம் நிரம்பிய தமிழறிஞன்
புவியிலே தமிழினைப் பரப்பிடுவான்
தவித்திடும் தமிழனுக் குதவிடுவான்
புவியிலே நிலைபெற நிறுத்திடுவான்.
180. - வ. பிரியா, சுசிலா ஆ.ப.நி.

கனவினில் பிறந்திடும் கலைமகளும்
வனத்திலே தெரிந்திடும் இமயமலை
கனவிலும் அழிந்திடா வயல்வெளியும்
இனத்தினால் பிரிந்திடா இனியனவாம்!
181. - செ. பாலமுருகன், சுசிலா ஆ.ப.நி.

நிலமதில் வதுமினி நிலையாமோ
பொலபொல வெனவுயிர் போகுமரோ
இலையுதிர் சருகென எத்தனைபேர்
நிலமதன் அகடுறல் நேர்வதுவோ
182. - மு.வே. கங்காதரன், சென்னை.

புகையினும் பகைவரே கொடியவராம்
புகையுமே பொறுத்திருந் தமிழ்த்திடுமே
பகைவரோ குடியினைக் கலைத்திடுவர்
தகைவிலா நடப்பினை விரட்டிடுவீர்!
183. - அர. மஞ்சுளா, கள்ளக்குறிச்சி.

இறைவனை மனத்தினில் நினைத்திடுவோம்
இறைவனை வணங்கிட முயன்றிடுவோம்
இறைவனைத் தொடர்ந்துமே நினைப்பதினால்
குறைவிலா வளத்துடன் வாழ்ந்திடலாம்!
184. - க. செந்தில் முருகன், சுசிலா ஆ.ப.நி.

நிறைமழை பொழிந்திடின் நிலம்சிறக்கும்
குறைவிலா வசிப்பினால் புவிசிறக்கும்
மறையறை மகிழ்வினால் விழாசிறக்கும்
நிறைகுறை அறிந்திடின் நலம்சிறக்கும்
185. - பா. இராசசேகரன், கள்ளக்குறிச்சி.

உயிருடன் உடலினை இணைத்திடவே
உயிரனை எழுத்துகள் உருவெடுக்கும்
உயிருடன் உயிருமே இணைந்திடவே
உயிரினக் குணங்களும் உருவாகும்!
186. - ஆ. அகிலா, சுசிலா ஆ.ப.நி.

அழகுடன் அடக்கமும் கல்வியதும்
பழகிடப் பயிற்சியில் முனைந்திடுவோம்
பழகிய பயிற்சியால் பலனடைந்தே
பழமென இனித்திடும் நிலையடைவோம்.
187. - பூ. அருணா, சுசிலா ஆ.ப.நி.

எனக்கொரு வழியினைக் கொடுத்தவனே
தனக்கென எதுவுமே எடுத்ததில்லை!
மனத்திலே விரிவினை நிலைப்படுத்தி
தினமொரு பணியினைச் சுமந்திடுவான்!
188. - த. சக்திவேல், சுசிலா ஆ.ப.நி.

இளைஞனே உழைத்திட முயன்றிடுவாய்!
இளைஞனே மதங்களை மறந்திடுவாய்!
இளைஞனே மனிதனை மதித்திடுவாய்!
இளைஞனே சமத்துவம் படைத்திடுவாய்!
189. - அ. பிரபாகரன், சுசிலா ஆ.ப.நி.

உழவினர் உயர்வினை அடைந்திடவே
முழங்கிடும் முயற்சிகள் நிறைவடையும்
பழங்களின் சுவையினை அறிந்திடுவோர்
பழகிட இனியவர் தெரிந்திடுவீர்!
190. - சி. அம்மு, சுசிலா ஆ.ப.நி.

திருநிறை உருவினால் தமிழ்மகளிர்
அருமறை திருக்குறள் வழுத்திடுவர்!
கருவறை உணர்த்திடும் திருவருளால்
அருந்தமிழ் இலக்கியம் இயற்றுவரே.
191. - இரா. சீதா, சுசிலா ஆ.ப.நி.

வயல்வெளி வளப்பமே வளப்பமாகும்
முயல்பவர் முயற்சியால் முகிழ்த்திடலாம்
பயனுடை செயலினைப் புரிபவரே
நயனுடை நலம்புரி மனிதராவர்!
192. - கு. செல்வராசு, இரிசிவந்தியம்.

குலமகள் மனம்நிறை அருள்புரிவாள்!
உலகுளார் உவந்திட அமிழ்தளிப்பாள்!
புலன்நிறை கருத்தென விளங்கிடுவாள்!
பலன்பல தருபவள் அவளாவள்!
193. - க. கார்த்திகேயன், பனையபுரம்.

விரும்பிய சுவையினைத் தருபவளே!
கரும்பென இனித்திடும் குலமகளே!
கருதிய கருத்தினைச் செறிவுடனே
திருவென உருப்பெறச் செய்திடுவாள்!
194. - க. உதயபாலன், பனையபுரம்.

கருத்தினால் உயர்ந்தது தமிழ்மொழியே!
கருவினைத் தருவதிம் முதுமொழியே!
உருகிடும் சுவையினில் இலக்கியத்தை
விருப்புடன் அளிப்பதும் தமிழ்மொழியே!
195. - க. உத்திரக்குமாரி, பனையபுரம்.

குருதியும் அளித்திடத் தயங்கிடாமல்
அருஞ்செயல் புரிந்தவர் வசித்ததனால்
கருதிய செயலினை முடித்தனரே
அரியதாய் விடுதலை பெற்றனரே!
196. - மா. மோகன்குமார், இரிசிவந்தியம்.

படிப்பகம்

www.padippakam.com



அடக்கமே உயர்வெனக் கருதியவர்
முடக்கமே அழிவென உணர்ந்தவராய்
மடத்தனம் அகற்றிட முனைந்திடலால்
தடங்களும் அழிதலை உணருகின்றோம்.
197. - செ. இராசலட்சுமி, சுசிலா ஆ.ப.நி.

அறிவுரை புகன்றவர் மறைந்திடாரே!
அறிவினை அறிந்தவர் மறந்திடாரே!
அறிவியல் உணர்ந்திடும் அருங்கருத்தை
அறிந்தவர் அறிஞரை மப்பராமோ?
198. - பி. குப்புசாமி, சுசிலா ஆ.ப.நி.

பயிலக முதனிலை கருதிடுவேன்
பயில்வதில் கவனமாய் இருந்திடுவேன்
பயில்வது படிப்பினொ டொழுக்கமுமாய்ப்
பயிற்சியில் இருந்திட முனைந்திடுவேன்.
199. - பெ. சியாமளா, சுசிலா ஆ.ப.நி.

முழங்கின புலிகளும் எண்டிசையும்
முழங்கின களிறுகள் பீடுடனே
முழங்கின புரவிகள் நிலைகுலைந்தே
முழங்கின அனைத்துமே மறைந்தனவே.
200. - புதுவை. நா. பொன்னுசாமி.

நிலத்தக டசைந்திட நிலைகுலைந்தோம்;
அலைக்கட லெழுந்திட அலைக்கழிந்தோம்;
மலைக்குவ டன்லெழ மலங்கலுற்றோம்;
அலைந்ததால் இயற்கையை அழுங்கலுற்றோம்.
201. - வே.ச. திருமாவளவன், சென்னை.

அசைந்திடும் உலகினில் அனைத்தையுமே
இசைந்திடும் கடவுளைத் தொழுதுவரின்
விசையுறு முயற்சியால் மாமதியும்
நசையுறு நலங்களும் நாம்பெறலாம்.
202.- து. விவேகானந்தன், பு.மா.ஆ.ப.நிறுவனம்.

விழுந்திடும் சிலந்தியும் வலைபின்னும்
அழுதிடும் குழவியே அமுதுண்ணும்
எழுந்திடும் துயர்தனை வீழ்த்திடவே
தொழுதிடு நலம்பெற இறைவனையே!
203. - ச. இலக்கியா, பு.மா.ஆ.ப.நிறுவனம்.

சுரண்டிடும் எலிகளை மிஞ்சிவிடும்
தரமிலா மனிதரைப் பாருங்கள்
குருதியை உறிஞ்சிடும் பூச்சிகட்குத்
தரணியில் இவர்நிகர் எவருமுண்டோ?
204. - ச. சீதாலட்சுமி, பு.மா.ஆ.ப.நிறுவனம்.

மனுதனுக் கியன்றிடும் உதவிகளைக்
கனிவுடன் வழங்கிட விரும்பிடுவோம்
இனியநல் இதயமும் நாம்கொண்டே
மனிதராய் உலகினில் சிறந்திடுவோம்.
205. - அ. இளவரசி, பு.மா.ஆ.ப.நிறுவனம்.

முகத்தினில் அழகுடன் மிளிர்ந்தாலும்
சுகத்தினில் பகட்டுடன் வாழ்ந்தாலும்
அகத்தினில் அழுக்கினை விதைப்பவரோ!
செகத்தினில் இழிவுடன் விழ்வாரே!
206. - ச. கிறித்தியான், பு.மா.ஆ.ப.நிறுவனம்.

பலதவம் இருந்ததன் பயன்தனையே
சிலநொடி உடைத்திடல் நல்லதாமோ?
கலவரம் புரிவதை நிறுத்திடுவோம்
நிலவரம் இனிதென அமைத்திடுவோம்.
207. - பா. தனலட்சுமி, பு.மா.ஆ.ப.நிறுவனம்.

இயற்கையே பெரிதென எண்ணிடுவாய்
செயற்கைதான் இயற்கையை வென்றிடுமோ
செயற்கையால் நிலதனை நடுங்கவிட்டாய்
இயற்கையின் வலிமையை இன்றுணர்ந்தாய்!
208. - ப. வனிதா. நெய்வேலி.

இளமையிற் பயிலெனும் அறிவுரையால்
வளம்பெற வழியதாம் எனவுணர்ந்தே
உளத்திலே எழுச்சியுற் றேன்,வாழ்க்கைக்
களத்திலே வெற்றியைக் கண்டுகொண்டேன்.
209. - ப. பிரபாவதி, புதுவை.

வளமிகு தமிழகம் படைத்திடவே
வளந்தரும் தொழிலினைச் செய்திடுவோம்
வளம்படத் தமிழினை வளர்த்திடவே
வளம்பெறும் கவிகளை இயற்றிடுவோம்.
210. - செ. தமிழ், மரகதபுரம்.

அடுப்பினை எரித்திட விறகிலையே
துடுப்பினால் துழாவிட வரகிலையே
கடுப்பினால் வயிறது கடுக்கிறதே
உடுப்பினைத் துவைத்திட மாற்றிலையே!
211. - விளம்பாக்கம், ம. கேசவன்.

மலைவளம் கருதிடின் செழித்திடலாம்
கலைவளம் பெறுவதால் களிப்புறலாம்
நிலவளம் நிலைத்திடின் வளம்பெறலாம்
தலவளம் பெறுவதால் களிப்புறலாம்.
212. - க. இளமதி, தி.கொ.அ.க.கல்லூரி.

தமிழரில் இருபிரி வுண்டறிக!
தமிழரில் கொழுத்தவர் ஒருபிரிவு!
தமிழரில் இளைத்தவர் ஒருபிரிவு!
தமிழனே இதில்எவர் பக்கம்நீ!
213. - இதயகீதன், தேனி.

பிறமொழி பயில்வதே பெருமையெனும்
குறுகிய நிலையிலே குனியாமல்
இறைமொழி அறமொழி இருந்தமிழே
நிறைவுடன் பயிலுக நிமிர்ந்திடவே
214. - சீ.பெ. முத்துக்குமரன்,கோவை.

www.padippakam.com



கெடுதலே புரிந்திடும் கீழ்மதுவால்
உடல்நலம், உளநலம், உறுபொருள்கள்
குடிப்புகழ் அனைத்துமே குலைவதுடன்
கடன்களும் பெருகிடும்! காலமிறும்!
215. - பு. சித்திரா, கரூர்.

தமிழ்மறைக் குறள்வழித் தளர்வின்றி
நமதுயிர் உளவரை நடந்திட்டால்,
இமையெனப் புரந்திடும்; இன்புறுத்தும்;
நமையொரு நலிவுமே நண்ணாது!
216. - ச. தேன்மொழி சண்முகம், கரூர்.

திடம்அளி பசுங்கறி, தேன்கனிகள்
தொடர்ந்துநீர் அருந்திடின், தொல்லையிலை!
உடல்நலம், உளநலம் ஓங்கிடுமே!
நெடிதுநாள் நிலைக்கலாம் நீணிலத்தில்!
217. - புலவர் மு. குளகன், கரூர்.

மணவினை முடியுமுன் உடலுறவில்
மனங்கொளல் தவறிலை கன்னியர்கள்
எனுமுறை உரைத்திடும் ஒண்டொடியாள்
மினுக்கிடும் படமதைத் தடுத்திடுவாய்.
218. - க. துரையரசன், வேலாயுதம்பாளையம்.

தமிழதன் இயன்மையைத் தாய்மையினை
இமிழ்ந்திடும் செழுமையைச் செம்மையினை
அமிழ்ததைச் சுவைத்திடா ஆட்சியினர்
உமிமொழிக் கிணையென உள்றுதலோ.
219. - பொறிஞர் அகன், திருச்சி.

குளம்,பிற நலம்பெறத் தூர்வாரார்!
செலவுகாட் டினர்செயல் செய்யாமல்!
மழைபொழி கிறநிலை, மாயுமக்கள்!
பிழைசெயும் அரசுதான் திருந்தாதா?
220.- தா. அன்புவாணன் வெற்றிச்செல்வி, காஞ்சிபுரம்.

நலம்பல விளைத்திடு நற்றமிழில்
பலப்பல வகைகளில் பாக்களையே
நிலவிடப் படைக்கிறார் பார்தம்பி!
உலகிடை உயர்தமிழ் உயர்ந்திடுதே.
221. - சிவ. கணபதி, புதுவை.

கனவுடன் குடியிரு நெஞ்சுக்குள்
கனவினால் மகுண்டிவண் வருந்தாமல்
உணர்வுடன் எனைநினை எப்போதும்
மனமகிழ் மணம் செயக் காத்திருப்பேன்.
222. - சுசிலா, திருக்கோவிலூர்.

நபிகளின் அறிவுரை நலம்பயக்கும்
சிபியினின் செயலுமே அறிவுறுத்தும்
கபிலரின் கவியுமே தெளிவுறுத்தும்
அபுதுலின் நெறிகளால் உயர்ந்திடலாம்.
223. - ச. பாசுகரன், இரிசிவந்தியம்.

நசைமொழி உரைத்துமே வாழ்வினையே
மிசைதொறும் திரும்பியே பார்ப்பவரோ
திசைதொறும் மருவியே நலம்பயந்தே
இசையென நிரம்பியே வாழ்வாரே!
224. - இரா. பிரவீனா, தி.கொ.அ.க.கல்லூரி.

நிலமகள் வருந்திட அவள்மடியில்
நிலவிடும் வளந்தரு நீருறிஞ்சின்
வலிமிகப் புரள்கிறாள்; நிலவதிர்வால்
குலைகிறாய் பயனிலை மானிடனே!
225. - புலவர் சூத்தரசன், புதுவை.

அழகிய திரைத்துறை அன்பர்காள்!
ஒழுகிய இசையொடும் உயர்ந்தவர்கள்
விழுமிய கருத்தொடும் விரும்புகிற
பழகிய தமிழ்நலப் படமெடுப்பீர்!
226.- புலவர் திருக்குறள் நாவை. சிவம், மணற்பாறை.

நோக்கிடும் இடமெலாம் சிற்றங்கள்!
தேக்கிடும் விழியினில் பேரலைகள்!
ஏக்கமுத் தமதினால் மனிதர்கள்
ஆக்கமே பெரிதென அலைந்ததாலோ?
227.- திருமதி. பாவை. கண்ணதாசன், கூடுவாஞ்சேரி.

கடற்கரைப் பரதவர் கணகலங்க
வடதிரை புயல்மழை வரம்புமீறக்
கடலலை குமுறியே கரைமோதி
உடல்பொரு ளனைத்தையும் ஒழித்த ,ம்மா!
228.- புலவர் கோ. இளங்கோ பாண்டியன், புதுவை.

அடைமழை பொழிந்ததால் நகரமெங்கும்
நடையிலாத் தெருக்களும் நலிவுகாணக்
கடைகளும் அடைத்ததால் இயல்புவாழ்க்கைத்
தடையுடன் சிதைந்த[illegible]
229.- கவிஞர் அரசு. ஈசுவரி இளங்கோ, புதுவை.

அருவியில் விழுகிற நீரினைப்போல்
பருகிய பழப்பிழி வின்சுவைபோல்
கருத்தினை அளிக்கிற ஆசிரியர்
தருகிற அறிவினைக் கேட்டறிவோம்.
230. - சு. ஐயப்பன், இல்லோடு.

புயல்மழை எனும்இவை பாழ்செயும்நாள்
புயலென நிவாரணப் பணிசெயவே
மயங்கிடா தரசுகள் முன்வரினே
பயன்பெறும் திராவிடம் மகிழ்ந்திடுமே!
231. - வளவனூர். தி. பழநிச்சாமி.

கரவுடன் தமிழக எல்லையிலே
உரமிலை தமிழனுக் கெனநினைந்து
விரவிய தரமிலாக் கன்னடரின்
விரகினை அழித்தவர் திமிர்தொலைப்போம்!
232. - பெரியார் பெரும்பாவலர், கருவூர்ப்பாரி.

படிப்பகம்

www.padippakam.com



வழிபடும் மரவினைக் கைவிட்டோன்
பழிப்பினில் வயிற்றினை வளர்க்கின்றோன்
பழிச்சியே பகைவனின் தாள்தொட்டோன்
வழிமுறை அடிமையாய்த் தந்திடுவான்.
233. - க. திருக்குறளமுது, கல்லக்குறிச்சி.

அறிவழி அருந்துவோன் இருகாலும்
அறிவழி நிகர்த்திட அலைவான்காண்
அறிவழி பெரியவர் அறவுரையை
அறிவழி தருதலை கொள்ளானே!
234. - க. திருக்குறட்பாவை, கல்லக்குறிச்சி.

கடும்பகல் கதிரவன் வெயிற்கொடுமை
சுடுகிற வருத்தமும் பாராது
தொடுகிற பணியினை முடிப்போர்கள்
விடுதலை நுகர்ந்திட வழியிலையே!
235. - க. திருக்குறளரசு, கல்லக்குறிச்சி.

தமிழ்த்துறைப் பிரிவினில் பயின்றேநான்
தமிழினில் மிதந்துகொண் டேயிருந்தேன்
அமைதியாய் இனிவரும் ஆண்டுகளில்
அமிழ்தமாம் தமிழினில் ஒன்றிடுவேன்.
236. - ச. தங்கவேல், கல்லக்குறிச்சி.

உனைத்தினம் கனவினில் காணாமல்
எனைமனம் இகழ்ந்திடும் நாள்தோறும்!
உனைமனம் இனியுமே மறந்திடுமோ
எனைத்தினம் நினைத்திடு தவறாமல்!
237. - கா. விசுவலிங்கம், நாகம்பந்தல்.

அலர்கிற அழகினில் நீயிருக்க
மெலிகிற முகமுடை காதலியே
மலியுறு மணமுடை குழலினையே
மலர்களாய்த் தினந்தினம் சரணடைவேன்.
238.- அ. வெங்கடேசன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

கனவினில் கலிமகள் அவளேதான்
நினைவினில் நிலைகெடச் செய்தவள்தான்
மனத்தினில் உனையுமே நினைத்ததனால்
எனையுமே மறந்திடச் செய்தாயே!
239.- இரா. அய்யனார் வேங்கடன், ஆலகிராமம்.

விழியினில் சுடரொளி ஏற்றிடுவாய்
[illegible] போற்றிடுவாய்
வழியினில் குறுக்கினைத் தவிர்த்திடுவாய்
பழியினை விரட்டியே வாழ்ந்திடுவாய்!
240. - சி. இளங்கண்ணன், கோலியனூர்.

மலரது சிறப்பதும் மணத்தாலே!
நிலவது சிறப்பதும் ஒளியாலே!
உளமது சிறப்பதும் உணர்வாலே!
நிலமது சிறப்பதும் நம்மாலே!
241. - வீ. சேகர், பழையகருவாட்சி.

உறவதும் பகையதும் இயல்பாகும்!
அறமதும் மறமதும் இயல்பாகும்!
பிறப்பதும் இறப்பதும் இயல்பாகும்!
சிறப்பதும் கிடப்பதும் செயலதில்தான்!
242. - கி. தசரதராமன், கடலி.

கனிவுடன் எனையவள் கவர்ந்ததனால்
தனிமையை விரட்டிட வந்ததனால்
இனிமையைத் தினம்தினம் விளைத்ததனால்
இனியவள் எனதருங் காதலியே!
243. - சு. பொழிலன், கோலியனூர்.

துடித்திடு வறியவர் துன்பநீக்கல்
படித்தவர் பணிவெனும் பண்பறிதல்
அடிப்படை யெனஅறி; அஃதிலார்நற்
குடிப்படை யெனக்கொளல் குற்றமேயாம்.
244. - சீனி. சிவனந்தம், சென்னை.

மனத்தினால் நினைத்ததால் மகிழ்கின்றேன்
வனத்தினில் பிறந்தயெம் தமிழ்க்கடலே
நினைவினில் இடர்களும் இன்பந்தான்
உனக்குயான் புகழ்மலர் சூட்டுகையில்.
245. - இரா. பிரபாவதி, சேலம்.

நினைத்திடும் பொழுதினில் உருக்குகின்றாள்
நனைகிற விழியினில் மறைந்திருந்து
மனதினில் மலருமென் பேரழகே
உனைத்தினம் நினைப்பதால் மறவேனே!
246. - அ. வேங்கடபிரபா, சின்னநெற்குணம்.

மொழிக்கெலாம் முதலினை; முறைப்படுத்திப்
பழிக்கொணா திலக்கிய இலக்கணங்கள்
விழிக்கெலாம் அணியெனும் செந்தமிழை
அழிக்கலாம் எனத்துணி வோரழிவர்!
247.- புலவர் அ. பொன்னையன், புலிகரம்பலூர்.

மயங்கிடும் மொழிகளில் மயங்குகின்றோர்
இயக்கிடும் வழிகளில் இயங்கிடுவார்!
தயக்கமும் மயக்கமும் தருமிழிவை!
பயன்தரும் செயல்களே நிலைக்குமென்றும்!
248. - இலெ. அ. அகத்தியன், சிறுமிளை.

கலப்படம் பொருள்களில் செய்திடுவோர்
நலப்படும் வழியென நம்புகின்றார்!
மலந்தினும் விலங்கவர்! வாய்ப்பிருந்தால்
விலைப்படும் கயவராம் இவ்வுலகே!
249. - செ.அ. கார்க்குழலி, ஓடாக்கநல்லூர்.

சரிந்ததே இமயமும் சாக்காடாய்!
சொரிந்தது மழையதும் புயலுடனே!
விரிகடல் வெறியுடன் சீறிடுதே!
புரிந்ததா? மனிதனே இப்புதிர்தான்!
250. - அன்புச்செல்வி, பெங்களூர்.

www.padippakam.com



இனியவென் இதயமே இளங்கொடியே
கனிந்தமாங் கனியுனை அடைந்ததாலே
இனியொரு பிறவியும் வேண்டுகிறேன்
தனிமையில் இருவரும் களித்திருப்போம்.
251. - ப. நீலா, புதுவை.

பெருகிடும் பெரும்படை அழிப்பதற்கோ?
பெருகிடும் அறிவுமே அழிவதற்கோ?
பெருகிடும் பெரும்படை தழைப்பதற்கே!
பெருகிடும் அறிவுமே வளர்ந்திடற்கே!
252. - த. வளர்மதி, இரிசிவந்தியம்.

சுவைத்திடும் சுவையெனத் தமிழ்மொழியால்
அவையினில் நகைச்சுவை பகன்றிடுவர்!
சுவையதும் அமுதமாய் விளங்கிடலால்
சுவைத்திட அகிலமும் விரும்பிடுமே!
253. - தெ. மீனாட்சி, இரிசிவந்தியம்.

நபிகளின் திருப்பெயர் ஒளித்திடுவோம்!
நபிகளின் மறைபொருள் உணர்ந்திடுவோம்!
நபிகளின் நலவழி நடந்திடுவோம்!
நபிகளின் அறிவுரை ஏற்றிடுவோம்!
254. - அ. இராமலிங்கம், இரிசிவந்தியம்.

அடக்கமும் உழைப்புமே உயர்த்திடலால்
அடங்கிடற் கடங்கியும் முடங்கிடற்கு
முடங்கிடா உறுதியும் உடையவனாய்த்
தடந்தவ றிடாதெனை நெறிப்படுத்தே!
255. - ப. சிவக்குமார், கீழ்ப்பாடி.

தமிழனாய்ப் பிறந்தவன் தரணியெலாம்
தமிழினைப் பரப்பிட முனைந்திடுவான்
அமிழ்தினை விருந்தெனப் படைத்திடலால்
தமிழ்நெறி தழைத்திட முயன்றிடுவேன்.
256. - கு. சிவக்குமார், சுசிலா ஆ.ப.நி.

தரணியில் தமிழினம் பரவிடவே
தரமிகு தமிழனாய் விளங்கிடுவேன்
முரசொலி முழக்கமாய் முழங்கிடுவேன்
அரசினர் தெளிவுற அறிந்திடுவர்
257. - கு. இளஞ்செழியன், சுசிலா ஆ.ப.நி.

செருக்குடன் நடப்பதைத் தவிர்த்திடுவீர்!
திருந்திய ஒழுக்கமும் பெற்றிடுவீர்!
கருத்துடன் அனைவரும் படித்திடுவீர்!
விருப்புடன் அதன்படி நடந்திடுவீர்!
258.- இரா. சரண்யா, சி.பா.சு.தமிழ்க் கல்லூரி.

உடையினை ஒழுங்குடன் அணிந்திட்டால்
உடையுமோ இளைஞரின் மனங்களுமே;
உடைகுறைத் தழகினைக் காட்டுதற்குக்
கடைத்தெருப் பொருளிலை உடலொன்றும்!
259.- கா. நீலவேணி, சி.பா.சு.தமிழ்க் கல்லூரி.

தெருவெலாம் தமிழினைக் கற்பிப்போம்
விரும்பியே இலக்கணம் கற்றிடுவோம்
விரைவினில் தமிழ்மொழி உயர்ந்துவிட்டால்
பெருமையில் அனைவரும் திளைத்திடுவோம்
260. - அர. புட்பாவதி, ஏப்பாக்கம்.

உருவமாய் நினைத்துதான் யாசித்தேன்!
வருகிறாய் மகிழ்ச்சியாய் நெஞ்சத்துள்!
தருகிறாய் இசைத்தமிழ் என்னுள் நீ!
அருளுவாய் இசைத்திடப் பாரில் நீ!
261. - செ. சுபத்திரா, மயிலம்.

பணமெனும் பொருளையே மிகவிரும்பி
அணங்கென அலைகிற பெண்பிறவி
உணர்வுடை பிறவியை வீணாக்கிக்
கணத்தினர் இழிவுறச் செய்பவளாம்!
262. - தமிழ்த்தேனீ, கல்லக்குறிச்சி.

உழவினை உயர்த்திடா ஆட்சியாளர்
விழவுகள் பலபல எடுக்கின்றார்
இழப்பினை அறிந்துமே செய்கின்ற
சழக்கரின் இருப்பிடம் வீழ்த்துவமே!
263. - ப. பெரியம்மாள், இரிசிவந்தியம்.

மரங்களை அறுத்திட மூலவர்கள்
அரசியல் திரையினில் மறைந்திருக்க
நிரந்தரத் தொழிலிவாக் கூலிகளை
மரங்களை அறுத்திடும் கூட்டமென்றார்!
264. - அய்யா. மோகன், கல்லக்குறிச்சி.

இருமனம் ஒருமனம் ஆகுங்கால்
திருமணம் நடத்திடப் பெற்றோர்கள்
அருட்டுதல் செயலினை நினைந்திலராய்
அருள்நெறி முறையினில் இணைசெய்வீர்!
265. - மோ. கலாபன், சின்னசேலம்.

இணைந்துமே உணவினை உண்ணாது
பிணைந்திட இணைந்திடும் குக்கல்போல்
பிணைந்திடக் களவினில் இனம்பாரார்
இணையராய் மணஞ்செய ஏற்காரே!
266. - க. கலையரசி, வானவரெட்டி.

இளையவர் கலைபயில் காலத்தில்
திளைத்தலில் மனத்தினைச் செலுத்தாமல்
உளையினை உடையினை மாறாக்கி
இளைப்பினில் இனத்தினை வீழ்த்துகிறார்.
267. - மோ. கலாநிதி, தேவபாண்டலம்.

அழகினில் நிகரிலை எனவிருந்தும்
உழப்புதல் செயலிலாப் பணபிருந்தும்
விழவிய பணப்பொதிக் கொணராளை
அழலினைப் பெருக்கியே அழிக்கின்றார்.
268. - இராச. கீதா, விருகாவூர்.

www.padippakam.com



தமிழ்மண இராவணப் பாவியத்தால்
தமிழரின் சிறப்பியல் தகைமையும்
தமிழுயர் குணத்தொடு படைத்திட்ட
தமிழுயிர்க் குழந்தையாம் வாழ்கவாழ்க!
269. - சி. வெற்றிவேந்தன், பாகூர்.

அழிந்தன மழிந்தனம் வடமொழியால்!
எழுந்தன மெழுந்தன மறைமலையால்
விழுந்தனம் விழுந்தன மாங்கிலத்தால்!
எழுந்தின மெழுந்தின மென்றப்பா?
270. - புலவர் சயராமன், கள்ளக்குறிச்சி.

குறளினை அருளிய வள்ளுவனோ
நெறியினை மலர்களாய் மலர்வித்தான்
அறிவினை வளர்த்திட அந்நெறியின்
அறத்தினை முழுவதும் கற்போமே!
271. - அ. பிரகாசு, கோட்டேரி.

கலைகளை வளர்த்துமென் கல்லாமைக்
களைகளை அகற்றிடும் ஞானஒளி
நிலவினொ ளிவடிவாய்க் கொண்டுள்ள
மலர்களில் அமர்ந்திடும் தாயாவாள்!
272. - அ. அண்ணாதுரை, வீரட்டிக்குப்பம்.

நலமுடன் உலகினில் வாழ்வதற்கே
நலிந்துடல் நமையுமே பெற்றெடுத்தாள்!
பொலிவுடன்அவளையும் போற்றிடுவோம்
நலங்கெடா முறையினில் காத்திடுவோம்.
273. - கு. சங்கீதா, விருத்தாசலம்.

உணர்வுடை இனமது முன்னேறும்!
பணமுடை குழுமமும் பாங்குறுமே!
எணமுடை எழுத்தருக் கேற்றந்தான்!
பணிவுடை இளைஞரும் பயன்மிகுவர்
274. - சா. கண்ணன், புதுச்சேரி.

பலருளும் பதிந்தவர் பாமறவர்
நலந்தரும் வகையினில் நாவலவர்
கலைமிகு கனித்தமிழ்க் காவலவர்
நிலைகதிர் நிலையினர் தூயவரே!
275. - ஆ. வேணிசீ, விளாப்பாக்கம்.

பலபடைப் புகள்படைத் தஎன்நெஞ்சில்
சிலநினை வுகளினால் நின்றென்றும்
கலங்கமின் றருள்நிறை பார்வையில்
மலர்களாய் இருப்பவள் என்தோழி
276. - இரா. அருள், மயிலம்.

கலைநிறை முகத்தினை உடையவளைத்
தலைமகன் நினைவினில் சுமந்திங்கே
நிலமகள் வரவினைத் தினந்தோறும்
நிலவினின் குளிரினில் சுவைக்கின்றான்.
277. - இரா. செந்தில்குமார், மயிலம்.

குளிருடன் பொழிந்திடும் பனித்துளிகள்
தளிரினில் விழுந்திட - மென்காற்றால்
விலகிடும் இலைகளில் இடையினிலே
மலர்களும் சிரித்திடும் முகம்கண்டேன்
278. - அ. சரவணன், மயிலம்.

பரிவலம் வருவதால் பயனில்லை!
நரிவலம் வருவதால் நாடழியும்!
கரிவலம் வருவதைக் கண்டதுண்டோ
கிரிவலம் வருவதால் கிடைப்பதென்ன?
279. - காரை. இளங்கம்பன், புதுச்சேரி.

இருள்மனம் தெளிவுற எண்ணுதிரேல்,
அருள்மணம் கமழ்ந்திடும் அருந்தமிழின்
திருமுறை களில்மனம் செலுத்திடுமின்;
மருளுறு பிறவியும் மாய்ந்திடுமே!
280. - பேரா. கி. சிவகுமார், விருத்தாசலம்.

மொழியினின் கருவினில் மண்ணையும்,
உழைப்பினின் உருவினில் உன்னையும்,
விழிப்பினின் விதையினில் விண்ணையும்,
செழிப்பினில் பயிர்களாய்க் காண்பாயே!
281. - ந. தவணன், மொடையூர்.

உயிர்ப்பலி அளித்திடும் குண்டுவெடிப்பாய்
இயல்புடன் நடத்திடும் கொடுஞ்செயலை
அயலவன் இவனெனப் பாராமல்
புயலென அழித்திடப் புறப்படுவாய்!
282. - த. மன்றவாணன், சேலியமேடு.

## பாடல் படைத்திடுக — வஞ்சி விருத்தம் - 9

துடிக்கிறார் மாமத வெறிபிடித்தே
வெடிக்கிறார் குண்டுகள் தொடராக
மடிக்கிறார் பல்லுயிர்; இவர்குழுவை
முடிப்பதே ஆள்பவர் முதற்கடனாம்.

1. ஒவ்வோரடியிலும் மூன்று சீர்கள் இருக்க வேண்டும்.
2. ஓரடியின் சீரமைப்பு முறையே : **கருவிளம்+கூவிளம்+காய்**
3. இவ்வாறமைந்த நான்கடிகள் ஓரெதுகை பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறமைந்த பாடல் ஒன்றை விரும்பிய பொருளில் இயற்றி, வரும் 30-11-05 க்குள் விடுக்க. **- புலவர் அரங்க. நடராசன்**

www.padippakam.com



# கருத்தரங்கம்

**15.10.2005 நற்றமிழ் இதழின் முதல் கருத்தரங்கப் பகுதிக்கு ஆசிரியர் தந்த குறிப்பிற்குத் தரப்படும் மறுசிந்தனை.**

தொலைப் பேசியைத் தொலைபேசி என எழுதினாலும் பொருள் மாறுபடாது என்று நான் தெரிவித்தது ஒழிபியலாக அரிதாய் வருவது கருதியாகும். அதற்குத்தான் தொலை பேசியில் பேசினேன், தொலைப் பேசியில் பேசினேன் என எழுதிக் காட்டி இரண்டிலும் உள்ள ஓசை இனிமையும் இன்னாமையும் காரணமின்றிப் பொருள்மாறுபாடில்லை என்றேன்.

இதற்கு ஆசிரியர், குறிப்பு 'இ'யில் தொலைந்த, தொலைகின்ற, தொலையும் பேசி என்ற தொடர்கள் தொலைப்பேசி என்பதிலிருந்து பொருள் மாறுபடுகின்றனவே என வினவியுள்ளார். வினைத்தொகையாக விரிக்கக் கூடாது என நான் எழுதியதைக் குறிப்பு 'அ'வில் உடன்படும் ஆசிரியர் 'இ'யில் விரித்தது ஏன்? எனத் தெரியவில்லை.

மேலும் ஒற்றுமிகாமல் அரிதாய் வருவதற்குத்தான் நக்கீரர் 'பழமுதிர் சோலை மலைகிழ வோனே' எனப்பாடியதை எடுத்துக் காட்டினேன். இதற்கு எதும் கூறாத ஆசிரியர் ஓசை நயம் ஒன்றைக் கருதி விதிகளைப் புறந்தள்ளல் நன்றாகுமா? என்றது நக்கீரருக்குமா?

"ஓசை நயம் மாறக் கூடியது, ஒருவர்க்கொருவர் ஏற்கலாம் விடுக்கலாம் என்பதால் முன்னரே வகுக்கப்பட்டதை மாற்ற வேண்டுமானால் உரிய விளக்கம் தரவேண்டும் எனக் கூறுதற்கு 'வல்லொற்றுத் தொடர்மொழி' எனும் நூற்பாவின்படி, 'கொக்குப்பறந்தது' என வலி மிகுதலை ஏற்க மறுத்திடும் புலவரும் உளர்" என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

எழுவாய்த் தொடரில் வன்தொடர்முன் வலிமிகா என்பதை, 'அல்லது கிளப்பின் எல்லா மொழியும், சொல்லியபண்பின் இயற்கையாகும்' (தொல்.குற்.புண-425) என்ற நூற்பா நிறுவுகிறது.

ஆறு ஈறும் இயல்பாய் முடியும் என இளம்பூரணரும் நச்சரும் உரைகாண்கின்றனர். எடுத்துக்காட்டில் வன்தொடர் தவிர்த்த ஐந்திற்கே கூறினாலும் வன்தொடருக்குக் காட்ட அரிது என்றதால் விட்டனர்போலும். இதனால் குறை என்றல் கூடாதென்க. தொல்காப்பியர் எல்லாமொழியும் என்றதால் ஆறு ஈறும் எனப்பட்டது வன்தொடர்க்கு உதாரணம் காட்டப்பட வில்லையானாலும் உண்டு எனபதும் உரையாசிரியர்கள் காட்டாதகாலப் பின் காலத்தில் காட்டின் ஏற்கலாம் என்பதும் கொள்ள வேண்டும். அந்த வகையில் 'கொக்கு பறந்தது' என வலிமிகாமல் வருவதை உதாரணமாக அமைப்பதில தவறில்லை எனலாம். 426ஆம் நூற்பாவின்படி வலி மிகுத்துக்காட்டினும் சரியே. இவற்றால் பொருள் மாறுபடா என்பதே உண்மை.

படிப்பகம்

www.padippakam.com



குறிப்பு 'ஆ'வில் ஓசைநயம், பொருட்சிறப்பு, தொடரமைப்பு கருதியே இலக்கணப் புலவர்கள் விதிகளை வகுத்தனர் எனக்கூறும் ஆசிரியர் கருத்து ஏற்புடையதானாலும் சில விதிவிலக்கும் உண்டு என்பதை மறுத்தற்கில்லை.

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் என ஒற்று மிகுத்தல் முறை. ஆனால் மிகாமலே எழுதப்படுகிறது. காரணம் பொருளடிப் படையில் விதிவிலக்காக ஏற்கப்பட்டதென்க. விருது நகர்க்குரியவர் மதுரைக்குரியவராகிவிடுவார் என்றதால் ஒற்றுமிகா நிலை ஏற்கப்பட்டது.

ஆக இலக்கணம் என்பது அவ்வப்போது உருவாகும் பொருத்தமான புதுப்புது வளர்ச்சியைப் பழமையுடன் சேர்த்துக் கொண்டே போகவேண்டும் என்பதுதான் மொழிவளர்ச்சிக்கும் உகந்தது. அதற்காகத்தான் மூலநூலாசிரியர்கள் விதிவிலக்காக நூற்பா செய்தனர். மேலும் உரையாசிரியர்கள் மூல ஆசிரியர் கூறும் இலேசினால் இப்படிக் கொள்ளலாம் என்றும் எழுதிக்காட்டினர் என்பதால் சில அரிதான வழக்குகளை ஏற்கும் நோக்குடன் தொலைபேசியை ஏற்கலாம் என்க.

- தெ. முருகசாமி, புதுச்சேரி - 9.

குறிப்பு : நூறுபேர் ஒரு கூட்டத்திற்கு வருதல் வேண்டும், அவருள் 99பேர் வந்துவிட்டனர். ஒருவர் மட்டும் வந்திலர். எனில் 99 பேரின் பெயரையும் தனித்தனியே கூறி இவரெல்லாம் வந்துவிட்டனர் எனக் கூறார்; நூறுபேரும் வந்துவிட்டனர் எனவும் கூறார். மாறாக எல்லாரும் வந்துவிட்டனர் ஆனால் அன்பழகன் மட்டும் வந்திலர் என்றே கூறுவர். இது மரவு. எல்லாரும் வந்து விட்டனர் எனக் கூறிவிட்டுப் பிறகு அன்பழகன் மட்டும் வந்திலர் என்பது முறையாகுமா என எவரும் வினவார்.

அந்த மரபு முறையில் அமைந்ததே பின்வரும் நூற்பா.

**"அல்லது கிளப்பின் எல்லா மொழியும்**
**சொல்லிய பண்பின் இயற்கை யாகும்"**

- தொல் - எழு - குற்.புண - 425

ஆசிரியர் எல்லா மொழியும் எனக் குறிப்பிட்டுள்ளதால் எழுவாய்த் தொடரிலும் வல்லொற்றுத் தொடர் முன் மெல்லினமோ இடையினமோ உயிரனமோ வரின் ஒற்று மிகாமையைக் குறிக்குமன்றோ.

கொக்கு மடிந்தது - கொக்கு வீழ்ந்தது, கொக்கு அலைந்தது ஆகிய சான்றுகள் பொருந்துமன்றோ. எனவே பின்வரும் நூற்பா தெளிவாக வன்றொடர்முன் வல்லொற்றுவரின் ஏற்படும் வலி மிகுதற்கு மட்டும் உரியதென்க.

**'வல்லொற்றுத் தொடர்மொழி வல்லொற்று மிகுமே'**

- தொல் - எழு - குற் - புண - 426.

www.padippakam.com



கொக்குப் பறந்தது என்பது தெளிவான முறையான சான்றாகும். இதில் கொக்கு பறந்தது என வலிமிகுக்காமல் எழுதுதல் எந்த வகையிலும் ஏற்புடைத்தன்று. மேலும்,

**"அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**எல்லா இறுதியும் உகரம் நிறையும்"**

- தொல் - எழு - குற்.புண - 408.

இந்நூற்பா, தனிமொழியில் அறுவகைத் தொடரில் குறுகிய இறுதி உகரம் அல்வழி, வேற்றுமை ஆகிய இரு தொடர் மொழிகளில் தன் முழு மாத்திரை அளவினைப் பெறும் எனக் குறிக்கிறது. ஆனால் பின்வரும் நூற்பா,

**'வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழி**
**தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே'**

- தொல் - எழு - குற்.புண - 409.

வன்றொடர் வல்லெழுத்துவரின் தனது பழைய நிலையான மாத்திரை குறைதலை ஏற்கும் எனத்தெளிவாகக் குறிப்பிடுகிறது. நிலையலும் உரித்தே என உம்மைச் சேர்ந்திடக் காரணம் மெல்லினமோ இடையினமோ வரின் அந்நிலையை ஏலாது என்பதைக் குறிப்பிடற்கே ஆகும். கொக்கு பறந்தது. எனவலி மிகுக்காமல் எழுதுதல் இந்த நூற்பாவைப் புறந்தள்ளலேயாகும்.

- இறைவ் ழியன்

# புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

(புதுவை அரசு நிறுவனம்)

**112, காமாட்சியம்மன் கோயில் வீதி, புதுச்சேரி – 605 001.**

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் புதன் அரங்குகளில் நவம்பர் 2005 முதல் ஏப்ரல் 2006 வரை கீழ்க்கண்டவாறு **"நானும் தமிழும்" / "திங்கள்தோறும் இருகவிஞர்கள்" / கருத்தரங்க / இசையரங்க நிகழ்வுகள் அமையும் :-**

02-11-2005 **நானும் தமிழும்** - மு. இறைவிழியன்
09-11-2005 **இரு கவிஞர்கள்** - அரிமதி தென்னகன், சோதிதாசன்
16-11-2005 **பண்பாட்டில் இடமும் பொழுதும்** - ச. பிலவேந்திரன்
23-11-2005 **தமிழ் இலக்கியத்தில் இசை** - அரிமளம் சு. பத்மநாபன்
30-11-2005 **வள்ளுவம்** - ப. மருதநாயகம்
07-12-2005 **நானும் தமிழும்** - க. தமிழமல்லன்
14-12-2005 **இரு கவிஞர்கள்** - தண்டமிழ்ப்பித்தன், அமிர்தகணேசன்
21-12-2005 **திராவிட மானுடவியல்** - I - பக்தவத்சலபாரதி

- **ப. மருதநாயகம்,** இயக்குநர்

படிப்பகம்

www.padippakam.com



## புதுவைப் புலவோர்க்குத் தஞ்சையில் பாராட்டு!

தஞ்சையில் 8, 9-10-2005 நாட்களில் நடைபெற்ற தமிழ் உணர்வு எழுச்சி மாநாட்டில், பைந்தமிழ்ப் பாவலர் **கோ. புகழேந்தி**, நற்றமிழ் ஆசிரியர் புலவர் **மு. இறைவிழியனார்**, மரபுக் கவிஞர் **தே. சனார்த்தனன்** ஆகியோர்க்குச் **"செம்மொழிப் புரவலர்"** எனும் விருதுகள் வழங்கப் பட்டன.

விருதுகள் பெற்ற புதுவைப் புலவர்களை நற்றமிழ் போற்று கின்றது.

## கவிஞர் தே. சனார்த்தனன் தங்கக் காசு பரிசு பெற்றார்!

பிரான்சுக் கம்பன் கழகத் தலைவர் பாவலர் கி. பாரதிதாசனின் தந்தையாரும் நற்றமிழ்ப் படைப்பாளருமான கவிஞர் **தே. சனார்த்தனன்** அவர்கள், புதுவை வாசகர் வட்டம் 11-9-2005 அன்று நடத்திய பாரதிவிழாக்கவிதைப் போட்டியில் "தங்கக் காசு" பரிசு பெற்றார்.

பரிசு பெற்ற பாவலரை நற்றமிழ் பாராட்டி மகிழ்கிறது.

## *கருப்பண்ணன் செல்லம்மாள் இலக்கிய அறக்கட்டளை*

### *வேலாயுதம்பாளையம்*

கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம் கருப்பண்ணன் செல்லம்மாள் இலக்கிய அறக்கட்டளை நடத்திய 8-ஆம் (2005) ஆண்டிற்கான பாநூல்கள் பரிசுப் போட்டியில் கடலூர் பாவலர் **க.பொ. இளம்வழுதி** அவர்களின் **"நாளங்கள்"** என்னும் பாநூல் சிறந்த நூலாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

**"அன்னைத் தமிழ் காக்க ஆர்த்தெழு"** என்னும் தலைப்பில் நடந்த பாக்கள் போட்டியில் முதல்பரிசு பாவலர் நன்செய்ப் **புகலூர் அழகரசன்** அவர்களும், இரண்டாம் பரிசு வடக்கனந்தல் புலவர் **இல. ஏமாபாய்** அவர்களும், மூன்றாம் பரிசு கள்ளக்குறிச்சி பாவலர் **பெ. செயராமன்** அவர்களும் பெறுகிறார்கள்.

எதிர்வரும் நவம்பரில் (2005) நடைபெறும் தமிழகப் பெரு விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

## வாழ்நாள் உறுப்பினர்

பேராசிரியர் **து. திருநாவுக்கரசு**
66, சிசு நகர், வழுதரெட்டி, விழுப்புரம் - 605 401.

நன்றி!

- ஆசிரியர்

www.padippakam.com



# புதுவை அரசு கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் தமிழ்மாமணி, கலைமாமணி விருதுகள் நூற்பரிசுகள் வழங்கும் விழா

27-10-2005 ஆம் நாள் மாலையில் 'அண்ணாமலை பேருணவகத்தில்' நடைபெற்றது. கலை, பண்பாட்டுத்துறை இயக்குநர் செல்வி ந. சுமதி வரவேற்றார். வளர்ச்சி ஆணையர் மற்றும் செயலர் திரு பா.வே. செல்வராசு அவர்களும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு இரா.வே. சானகிராமன் அவர்களும் வாழ்த்துரைத்தனர். புதுவை மாநில முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள் தமிழ்மாமணி, கலைமாமணி விருதுகளையும் நூற்பரிசுகளையும் வழங்கியபின் வாழ்த்துரைத்தனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருது பெற்றோர்க்குத் திங்கள் தோறும் ஊக்கத்தொகையாக உருபா ஆயிரம் வழங்கப்படும் என அறிவித்து எல்லாரின் பாராட்டையும் பெற்றார். விருதுகளும் பரிசுகளும் பெற்றோர் சார்பில் தமிழ்மாமணி விருது பெற்ற புலவர் மு. இறைவிழியன் நன்றியுரைத்தார். உதவி நூலகத் தகவல் அலுவலர் திரு. பு. அப்பலசுவாமி நன்றி கூறினார்.

## விருது பெற்றோர்

**தமிழ்மாமணி - 2005**

திரு. மு. இறைவிழியன், புதுச்சேரி.

**கலைமாமணி - 2005**

திரு. தண்டமிழ்ப்பித்தன் (எ) இரா.வே. சீநிவாசன், புதுச்சேரி - இயல்
திருமதி. சி. பூங்கொடி பராங்குசம், புதுச்சேரி - இயல்
இயலிசைப் புலவர் திரு. இராச. வேங்கடேசன், புதுச்சேரி - இசை
திரு. ம. கந்தசாமி (எ) பாலசுப்ரமணியன் - இசை
திரு. இரா. கன்னையன், புதுச்சேரி - நாடகம்
திருமதி. அ. சுந்தரி, புதுச்சேரி - நாடகம்
திரு. இரா. சுப்புராயன் (எ) சாணக்கியன், காரைக்கால் - நாடகம்
திருமதி. விசித்திரா தினகரன், புதுச்சேரி - பரதநாட்டியம்
திரு. இரா. தாண்டவராயன், புதுச்சேரி - ஓவியம்
திரு. ப. தேவராசு, புதுச்சேரி - நாட்டுப்புறக்கலை

**கம்பன் புகழ் இலக்கியப் பரிசு - 2003**

புலவர் திரு. அரங்க. நடராசன், புதுச்சேரி - கவிதை
முனைவர் எ.மு. இராசன், புதுச்சேரி - கட்டுரை
திரு து. சுதர்சனம், புதுச்சேரி - நாடகம்
திரு. மு. நடராசன், புதுச்சேரி - சிறுகதை
திரு. வி. குழந்தைவேலு, புதுச்சேரி - புதினம்

**தொல்காப்பியர் விருது - 2003**

புலவர் திரு. ந. வேங்கடேசன், புதுச்சேரி

**சவகர்லால் நேரு குழந்தைகள் இலக்கியப் பரிசு - 2003**

பாவலர் திரு. துரை மாலிறையன், புதுச்சேரி.

படிப்பகம்

www.padippakam.com

AIR-MAIL

நற்றமிழ்-திங்களிதழ் பதிவு எண். புது.த.தி./2000/4265
NATRAMIZH-MONTHLY Registration No. PONTAM / 2000 / 4265

அஞ்சல் உரிமம் : த.நா / அ.து.த 128 / 03-05. திங்கள் தோறும்
15 / 16ஆம் நாளில் நெல்லித்தோப்பு அஞ்சலகத்தில் சேர்க்கப்படுகிறது.
Postal registration : TN/PMG (CCR) 128/03-05. Posted
at NELLITHOPE POST OFFICE On 15th / 16th of Every Month.

**அச்சிட்ட நூல் அஞ்சல் - Printed Book Post**

**LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP**
**NO. SSP / PY / 83 / 03-05**

**N. MURALY**
Dysse garden - 24, T.V,
7500 Holstebro,
**Danmark.**







புதுவை மாநில முதல்வர் மாண்புமிகு **ந. அரங்கசாமி** அவர்கள் நற்றமிழ்ப் புரவலர் புலவர் **பூங்கொடி பராங்குசம்** அவர்கட்கு இலக்கியவிருதான கலைமாமணி விருதினை வழங்குகிறார்.

| | | |
|---|---|---|
| தனி இதழ்க் கட்டணம் | — உரு | 6.00 |
| ஆண்டுக் கட்டணம் | — உரு | 75.00 |
| வெளிநாட்டு ஆண்டுக் கட்டணம் | — உரு | 300.00 |
| வாழ் நாள் கட்டணம் | — உரு | 600.00 |

திரு: ந. இளம்பூரணன் அவர்கட்கு உரிமையான 17, முதல் தெரு, இராசய்யர் தோட்டம், புதுச்சேரி - 605 013. இல் உள்ள அகத்தியர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, நற்றமிழ் உரிமையாளரும் ஆசிரியருமான புலவர் மு. இறைவிழியனாரால் 43, அங்காடித் தெரு, நெல்லித்தோப்பு, புதுச்சேரி - 605 005. என்கிற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது. தொலைபேசி : (0413) 2203765

Printed by **N. Elampuranan,** Owner of the press and published by **M. Iraivizhiyan** on behalf of **M. Iraivizhiyan** and printed at AHATHYAR PRESS, 17, First Street, Rajaiyer Thottam, Pondicherry - 605 013. and published at 43, Market Street, Nellithope, Pondicherry - 605 005. Editor **M. Iraivizhiyan,** Telephone : (0413) 2203765